பக்கங்கள்-16 | 28.ஆவணி.2022 | விலை–40.00





# தினப்புயல்

news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –383




## ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த இலக்கு!

## பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருப்பது ஆபத்து!

## பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்கியது ஏன்?

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த இலக்கு!



முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ , தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்கின்ற இரு இனவாதிகள் இந்த நாட்டை ஆட்சி செய்து செய்து கொண்டிருக்கின்றார்கள் என்கின்ற நிலைப்பாட்டில் தான் இன்றைய அரசியல் நிலவரங்கள் சமகாலங்களில் சென்றுக்கொண்டிருப்பதாக அவதானிக்க முடிகின்றது.

அந்த அடிப்படையில் கடந்த காலங்களை பார்க்கின்ற பொழுது அவர்கள் ஒரு போதும் தமிழினத்துக்கான தீர்வினை பெற்று தரும் அடிப்படையில் செயற்படவில்லை. அது போன்று 2001 - 2004 சமாதான காலப்பகுதியிலே தமிழீழ விடுதலைப்புலிகளுடனான காலப் பகுதியிலே ரணில் விக்கிரமசிங்க அவர்கள் நடந்து கொண்ட விதமும் தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டத்தை கொடுக்க சந்திரிக்கா முனைந்த போது அதனை தடுக்க முனைந்ததும் பாராளுமன்றத்திலே கலவரங்கள் விளைவித்ததுமான நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றன. ஒரு இடைக்கால நிர்வாகம் சம்மந்தப்பட்ட விடயத்தை அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பேச்சு வார்த்தையை 95,96,97 காலப்பகுதியிலே சந்திரிக்காகுமாரதுங்க பண்டார நாயக்க குமாரதுங்க அவர்கள் மேற்கொண்ட போதிலும் அது தோல்வியில் முடிவடைவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரை சார்ந்தவர்களும். மீண்டும் அவர் ஒரு தீர்வு பொறிக்குள் வந்து தமிழ் மக்களுக்கான தீர்வை நோர்வேயின் அனுசரணையுடன் கொடுக்க வேண்டும்

விடுதலைப்புலிகளினுடைய ஆயுத போராட்டம் மௌனிப்புக்கான ஒரு சூத்திரதாரியாக செயற்பட்ட தற்பொழுது இருக்க கூடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இனப்படுகொலை என்கின்ற பொழுது மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் இனப்படுகொலையை இலங்கையில் மேற்கொண்டது என்பது தான் வரலாறு அது மாற்றுக்கருத்து இல்லை அந்த தொடர்ச்சியே அவ்வாறு தொடர்ந்து வந்தது அது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவில் இருந்து தற்பொழுது இருக்க கூடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரையில் என்று கூற முடியும். அதுதான் வரலாறுகள் தொடர்ந்து செல்கின்றன. இப்பொழுது இருக்கின்ற இந்த சூழ்நிலைகளில் ஒரு தீர்வு பொறியை இந்த நாட்டு மக்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும். பயங்கரவாத தடைசட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும். வடகிழக்கிலே தமிழ் மக்களுக்கான ஒரு சுயாட்சி வழங்க வேண்டும். இந்த மூன்று விடயங்களும் முக்கிய விடயமான தற்பொழுது இந்த நாட்டிலே இருக்கின்றது. இந்த மூன்று விடயங்களும் சீரான முறையிலே கையாளப்படுகின்ற பொழுது சர்வதேச நாடுகளினுடைய உதவி இந்த நாட்டிற்கு கிடைக்கும். சுற்றுலாதுறை மேம்படும் உள்ளாசபயணிகளின் வருமானத்தினால் நாடு முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் நிறையவே இருக்கின்றது.

ஆகவே இந்த விடயங்களை தவிர்த்து அரசியல் பரப்பிலே அதாவது ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தனது ஐக்கிய தேசிய கட்சியை தான் சக பாராளுமன்றில் உள்ளவர்களையும் இணைத்து ஏற்கனவே இருந்தவர்களையும் இணைத்து ஒரு எதிர் கட்சியாக சரி அல்லது அந்த கட்சியை பலப்படுத்தி ஆசனங்களை கூட்டுவதற்கான அடுத்த காய்நகர்த்தல்களை இந்த கோட்டாபாய ராஜபக்ஷ , மஹிந்த குடும்ப அரசியலை வைத்து நகர்த்தி இருக்கின்றார். என்பது தான் தற்போதைய ரீதியிலான உண்மை ஆகவே தான் அவருடைய பாராளுமன்ற உட்பிரவேசம் என்பது ஒரு போனஸ் ஆசனத்தில் எந்தவொரு அடிப்படையிலும் அவர் வர முடியாத சூழ்நிலையிலும் அவர் அரசியல் ராஜதந்திரத்தை பயன்படுத்தி உள்நுழைந்தார். அதன் பின்னர் நிதி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ அவர்களை ஓரம் கட்டினார். அதன் பின் பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷவை ஓரம் கட்டினார். அதன் பின் ஜனாதிபதியாக இருந்த கோட்டபாய ராஜபக்ஷ அவர்களையும் ஓரம் கட்டினார். இவ்வாறு ஓரம் கட்டின பின்னர் தான் ஆட்சி பீடம் ஏறி பிரதமரானார். பின்னர் பதில் ஜனாதிபதியானார். பின்பு நிரந்தரமாகவே ஜனாதிபதியானார். இவ்வளவு விடயங்களையும் மிகவும் தந்திரமாக நகர்த்திச்சென்றார். இந்த அரகலபோராட்டங்கள் தொடர்ந்து இடம்பெறுகின்ற பின் புலத்தில் இருந்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பின்னர் அந்த அரசியலிலே ஒரு ராஜதந்திர நகர்விலே திடமாக இதன் மூலம் தன்னை எவ்வாறு வளர்த்துக்கொள்வது என்பதை அறிந்து தற்பொழுது அதிகாரத்தை ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மட்டும் தான் முழுமையான அதிகாரத்தை பயன்படுத்தி வருகின்றார்.

சிங்கள மக்களுக்கு எதிராக அந்த அதிகாரம் தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. என்பது தான் உண்மை. தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் தற்பொழுது சிங்கள மக்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகின்றது. அது தன்னுடைய அரசியலுக்காக அங்கு அநுரகுமார திசாநாயக்காவோ அல்லது சஜித் பிரேமதாசவோ இடது சாரி முன்னனியோ வாசுதேவ நாணயக்காரரோ எந்த கட்சியும் கோசம் போட்டும் எந்த ஒரு பிரயோசனமும் இல்லை. அவ்வாறு போராட்டங்களை தற்பொழுது முன்னெடுக்கின்றவர்கள். அதாவது கோட்டபாய ராஜபக்ஷ அல்லது மஹிந்த குடும்பத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்ற பொழுது திரைமறைவிலே மறைந்திருந்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கோட்டா கோகம போராட்டத்தை நிறுத்த கூடாது என்று குரல் எழுப்பி இருந்தார். அப்பொழுது அதன் பின்னர் இந்த கோட்டா கோ கம போராட்டம் வலுபெற்று நாட்டினுடைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பியோடிய பின்னர் அவர் அந்த போராட்டக்காரர்களையும் போராட்டத்திற்கு முன்னெடுத்தவர்களையும் கைது செய்கின்ற ஒரு நடவடிக்கையை அவர் மேற்கொண்டார். ஜனாதிபதி மாளிகை பிரதமர் அலுவலகம், பல வீடுகள் தீக்கரையாக்கப்பட்டன. அது மட்டுமன்றி பாராளுமன்ற வளாகத்தையும் கைப்பற்றி ஒரு நடவடிக்கையை செய்தால் சர்வதேச ரீதியாக பாரிய அழுத்தம் உருவாகும். இந்த நாட்டினுடைய புலனாய்வு கட்டமைப்பு பொலிஸ் முப்படைகளும் ஒரு பலவீனமானவர்கள் என்பது சர்வதேசம் விளங்கிக்கொள்ளும் என்ற வகையிலே நாங்கள் பலமாக இருக்கின்றோம் என்பதை நிரூபித்து இருக்கின்றார் ஜனாதிபதி அவர்கள்.

மற்றுமொரு விடயமாக சர்வதேச ராஜதந்திரிகளை சந்தித்து உரையாடியபொழுது உங்களுடைய நாட்டிலே பாராளுமன்றத்தை கைப்பற்றி ஆர்ப்பாட்டகாரர்கள் ஆர்ப்பாட்டம் செய்த பொழுது எந்தவொரு நடவடிக்கைகளையும் கொண்டு செல்ல முடியாத ஒரு முழுமையான விளக்கத்தை அவர் கொடுத்திருந்தார். 90நாட்கள் இந்த நாடு முடக்கப்பட்டு இருந்தது. 90நாட்களும் இந்த ஜனாதிபதி செயலகம் முடக்கப்பட்டு இருந்தது அது போன்று இந்த போராட்டகாரர்களால் எவருமே சென்று எந்த நடவடிக்கையும் செய்ய முடியாத நிலை தோற்றுவிக்கப்பட்ட இடத்திலே அவர் கூறுவது போன்று இந்த நாட்டிற்கு உள்ளாசபயணிகள் வர முடியாது, வழமையான செயற்பாடுகள் முடக்கப்பட்டு இருக்கின்றன, போராட்டம் போராட்டம் என அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றுதிரண்டு தொழில் நடவடிக்கைகள் இதனால் பாதிக்கப்பட்டது. பாடசாலை மாணவர்களது பிரச்சனை கொரோனா வைரசின் தாக்கத்திற்கு பிறகு இலங்கையிலே ஒரு மாற்றம் இவ்வாறான ஒரு கட்டத்தை எட்டிப்பிடித்துள்ளது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளியை ஜனாதிபதி கொண்டு வந்தார். அதன் பிறகு சர்வதேச நாடுகளினுடைய அனுகுமுறையை எவ்வாறு கையாள வேண்டும் என்ற மற்றமொரு திட்டத்தை அவர் தற்பொழுது செய்துக்கொண்டிருக்கின்றார். என்னுடன் இணைந்து இதிலே விரும்புகின்றவர்கள் செய்யுங்கள். அல்லது கட்சியையும் அமைச்சுப்பொறுப்பையும் விட்டுவிட்டு செல்லுங்கள் என்ற வாசகத்தை அவர் அடிக்கடி சொல்லி வருகின்றார். இதற்கிடையில் ராஜதந்திர ரீதியிலான இந்தியா,சீனாவை எவ்வாறு கையாள வேண்டும் என்பதை மிகவும் ஒரு சூட்சகமாக அவர் செயற்படுத்தினார்.

சீனாவினுடைய கப்பலையும் வரவிட்டார். இந்தியாவினுடைய விமானத்தையும் வரவிட்டார். இரண்டு நாடுகளிடமும் இருந்து உதவிகளைப்பெற்றுக்கொண்டார். அதிலும் இரட்டை வேடம் போடுகின்ற ஒருவராகவே இந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் திகழ்ந்து வருகின்றார்.

இதிலே இந்த கோட்டாபாய ராஜபக்ஷக்களை இனப்படுகொலை சம்மந்தமாக நிலைநிறுத்த வேண்டுமாக இருந்தால் இவருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பொழுது இவரை இழுகுவாக ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்பாகவும்அல்லதுசர்வதேசநீதிமன்றத்திற்கு முன்பாகவும் ஒப்படைத்து அதற்கான விசாரணை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்க முடியும். ஒரு வேலை இவ்வளவு விடயமும் கை மீறி போனால் நிச்சயமாக சர்வதேசத்தினுடைய அனுகுமுறையை ஏற்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஒரு நடவடிக்கையை எடுப்பார் அந்த நடவடிக்கை என்பது இந்த கோட்டாபாய ராஜபக்ஷ குடும்பத்தை கூட்டில் ஏத்துகின்ற நடவடிக்கையாக இருக்கும். அந்த கட்டம் அமைகின்ற பொழுது இந்த நாட்டினுடைய அரசியலிலும் ஒரு மாற்றம் ஏற்படும்.

முஸ்லீம்கள் தீவிரவாதிகள், தமிழர்களும் தீவிரவாதிகள், தீவரவாதிகளுடன் தொடர்பு இருப்பதால் தான் முஸ்லீம் அமைச்சுப்பதவிகளை தாக்கி எறிந்தோம். இவ்வாறு சதி திட்டமாக ஈஸ்டர் குண்டு தாக்குதல் இடம்பெற்றதன் பின்னர் தான் இந்த ஜனாதிபதி தேர்தல் ஜனாதிபதி தேர்தலிலே கோட்டபாய ராஜபக்ஷ அவர்களும் மஹிந்த குடும்பமும் அபார வெற்றியை அடைந்திருந்தமை குறிப்பிடதக்கது. எவருமே எட்டாத ஒரு இலக்கை அவர் எட்டிபிடித்தார். இறுதியிலே அவரது சூழ்ச்சி விளையாட்டுக்கள் ஒரு விடயத்தை மறைமுகமாகவும் வைத்திருக்க முடியவில்லை. அந்த சூழ்ச்சிகள் எல்லாம் திரைக்கு பின்னாள் செய்யப்பட்ட பொழுதிலும் திரைக்கு முன்னாள் வருகின்ற பொழுது பலர் கைது செய்யப்பட்டார்கள். அது தொடர்பான விசாரனைகளும் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதிலே ஒரு விடயம் சர்வதேச ரீதியாக இந்த நாட்டை காட்டிக்கொடுக்கின்ற ஒரு தலைமை வருகின்ற பொழுது அது எந்த தலைமையாக இருந்தாலும் சிங்கள பேரினவாதிகளால் ஓரம் கட்டப்படுவார்கள் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இந்தவொரு கட்டத்திலே இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தை சீர்செய்வதற்கு ஒரு பூகோள அரசியலை இந்த அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. மேற்கொண்டால் மாத்திரமே அவர்கள் குறிப்பிட்ட இலக்கை அடைய முடியும்.

இந்தியாவையும் பகைக் முடியாத ஒரு நிலையில் இந்தியா காலா காலமாக உதவி செய்து வருகின்றது. யுத்தத்திற்கு பின்னரான உதவிகளை தான் சீனா செய்தது. ஆனால் யுத்தத்திற்கு பின்னரான உதவிகளை செய்த சீனா இன்று முக்கியதுவம் வாய்ந்த இடங்களை தன் கையகப்படுத்தி இருக்கின்றது. சர்வதேச ரீதியிலும் கூட அம்பாந்தோட்டை துறைமுகத்திலே எந்தவொரு காரணங்களும் இன்றி அந்த கப்பல் துறைமுகத்திற்கு வருகின்றது என்றால் குத்தகைக்கு எடுத்திருக்கின்றார்கள். அவர்கள் நினைத்த நேரம் வரலாம் போகலாம் என்ற நிலை தான் அதே போன்று போட் சிற்றியை கையகப்படுத்தி இருக்கின்றார்கள். அதனூடாக அவர்களது அரசியல் நடவடிக்கைகள் செய்வதான ஒரு நிலைமை அங்கு காணப்படுகின்றது. ஆகவே இவ்வாறான ஒரு நடவடிக்கையில் இருந்து நாட்டை காப்பாற்ற வேண்டுமாக இருந்தால் அனைத்து கட்சிகளும் அல்லது இந்த தமிழர் தரப்பு என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக சிந்தித்து செயற்பட வேண்டிய சூழ்நிலைக்குள்ளே தள்ளப்பட்டுள்ளோம்.

ஆகவே இந்த அரசியல் காரணங்கள் எல்லாம் அவருடைய சாதகங்களாக இந்த கோட்டாபாய ராஜபக்ஸவாக இருக்கலாம் அல்லது ரணில் விக்கிரமசிங்கவாக இருக்கலாம் இவர்கள் பயன்படுத்திக்கொண்டார்கள். ஆகவே தொடர்ந்தும் இவ்வாறான பயன்பாட்டிற்கு இடமளிக்க முடியாது இந்த இனவாத, தேசிய வாத அரசியலை இந்த நாட்டில் இருந்து அப்புறப்படுத்துவதற்கு உடனடியாக தமிழ் தரப்பு அரசியல் சுபீட்சமான காய்நகர்த்தல்களை மேற்கொண்டால் மட்டுமே இந்த நாடு சரியான ஒரு இலக்கினை எட்ட முடியும்.

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

# இலங்கையின் பொருளாதாரமும் டயஸ்போராக்களும்

இலங்கை திருநாட்டில் என்றும் இல்லாதவாறு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிலைக்கு வெளிப்படை காரணங்களாக பல்வேறு விடயங்களை அரசியல் வட்டாரங்கள், ஆய்வாளர்கள் கூறினாலும் அதற்குரிய தீர்வை நோக்கி நகர்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றது.

உலக நாடுகளை பொறுத்தவரையில் தனது பூகோள அரசியல் நிலைமைகளை கருத்தில் கொண்டே செயற்படும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அது மட்டுமன்றி அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை நசுக்குகின்ற செயற்பாடுகளையே காலங்காலமாக அபிவிருத்தி அடைந்த நாடுகள் செய்து வருகின்றன.

எமது நாட்டின் பொருளாதாரம் பிரச்சினை என்பது உள்ளக போர் பொறிமுறையை வைத்தே தீர்மானிக்கப்பட்டதொன்று.

விடுதலைப்புலிகளின் போராட்டத்தில் அவர்களை அறிவதன் ஊடாகவே இலங்கை தேசத்தில் தாம் நினைத்தவாறு கால்தடம் பதிக்க முடியும். என்பதினால் இந்தியா, சீனா, அமெரிக்கா உட்பட 52 நாடுகள் இணைந்து இந்த போராட்டத்தை முடிவுக்குக்கொண்டு வந்தது. இன்று மீண்டும், புலிகளின் ஆதரவும் தேவை என்கின்ற ஒரு நிலைமை தோற்றம் பெற்றுள்ளது.

ஏற்கனவே இலங்கை அரசினால் தடைசெய்யப்பட்டிருந்த புலம் பெயர் அமைப்புக்களான அவுஸ்ரேலிய தமிழ் காங்கிரஸ், உலக தமிழர் பேரவை, உலக திராவிட ஒருங்கிணைப்பு குழு, திராவிட ஈழ மக்கள் சம்மேளனம், கனேடிய தமிழ் காங்கிரஸ், பிரித்தானிய தமிழர் பேரவை ஆகிய தற்போது இலங்கை அரசினால் தடைநீக்கம் செய்யப்பட்டுள்ளன. ஆனால் தற்போதைய சூழ்நிலையில் புலம் பெயர் தளத்தில் உள்ள டயஸ்போராக்களை தவிர்த்து இலங்கையில் அரசியல் செய்ய முடியாத நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சிறிது சிறிதாக புலம்பெயர்ந்து வாழும் டயஸ்போரா அமைப்புக்களின் பல அமைப்புக்களுக்கு உள்ள பயங்கரவாத தடையை இலங்கை அரசு விரும்பியோ விரும்பாமலோ நீக்கியுள்ளது. இருப்பினும் இவர்களின் பேச்சினை நம்பி முழுமையாக டயஸ்போரா அமைப்புக்கள் செயற்படமாட்டார்கள்.

தற்போதைய உலக அரசியலின் மாற்றத்தினால், எதிர்வரும் காலங்களில், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு டயஸ்போராக்களின் பங்கு என்பது மிகவும் அவசியம் என்பதில் மாற்றுக்கருத்து எதுவும் இருக்க முடியாது.

# 188 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



குறித்த இடத்தை வந்தடைந்ததும் எகேர்கள் ஒருவருடன் மற்றையவர் நெருக்கமான வகையிலான சங்கிலித் தொடரணியாக மாறி, கெரில்லாக்களின் தங்கலிடத்தை அரைவட்ட வடிவில் முற்றுகையிட்டனர். இவை யாவும் அடர்த்தியான காட்டிருளில் மறைப்பாகவும் வேகமாகவும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் பார்வையால் இச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தக்கூடியதாகவே இருந்தது. எதிர்பாராத வகையில் முற்றுகை உடைக்கப்பட்டால் அதற்குரிய ஆதரவு செயற்பாடுகளுக்கான வேலைகள் உடனே மேற்கொள்ளப்பட்டன. இரவு கெரில்லாக்களின் இரகசியக் காவல் நிலையத்தைச் சிறப்பணிகள் சந்தடியின்றி அழித்தன. முன்னேற்றத் தாக்குதல் விடிகாலையில்,அதாவது இலக்குகளை இனங்கான கூடியதாக இருக்கின்ற நேரத்தில் தொடங்கப்பட்டது. சூரியன் உதிக்கின்ற திசையிலிருந்து (கிழக்கு திசையிலிருந்து) முன்னேறித் தாக்கினர். மேற்கே பின்வாங்கிச் செல்கின்ற கெரில்லாக்களுக்கான பொறிகள் காத்திருந்தன. எகேர்களுக்கு ஒரு பூரண பகற்பொழுது இருந்து. இரவு வருவதற்கு முன்னர் நடவடிக்கை முடித்துக் கொள்ளப்படுகின்ற ஒழுங்கில் தந்திரோபாய உத்திகள் தயாரிக்கப்பட்டிருந்தன. ஏனெனில் இரவு - முற்றுகையை உடைப்பதற்கு மிகவும் பொருத்தமான நேரமாகும். இருபது ஆண்டுகளுக்கு பின்னர் அமெரிக்கர்கள் வியட்கொங்குகளுக்கெதிராக இத் தந்திரோபாயத்தை கையாண்டனர்.

ஏதாவதொரு சம்பவத்திற்கு அல்லது சமர் நடவடிக்கைகளுக்கு பின்னர் கெரில்லாக்களின் சண்டைக் கட்டமைப்பொழுங்குகள் சிதறடிக்கப்படுகின்றபடியால்,குறிப்பிட்ட காலத்திற்கு ஏகோபித்த கட்டளைகள் அங்கே கிடைப்பதில்லை, அத்துடன் ஒழுங்கமைக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைக்கு உதவுகின்ற நிர்வகப்படுத்தல் வலையமைப்பும் குலைக்கப்படுகின்றது. இந்நிலைமைகளில் நேரடிச்சமர் கெரில்லாக்களுக்குக் கொடியதாகவும் அழிவுக்கானதாகவும் அமைந்துவிடுகினறது, வெப்பவலய காடுகளின் கடின தரையமைப்பு பிரதேசங்களில் அமெரிக்கர்கள், ஜேர்மனியர்களின் உத்திகளையே பயன்படுத்தினர். கெரில்லாக்களின் தொடரணியை மோட்டார்ச்சூடுகளால் தாக்கி, குதிரை தொடரணி, விநியோகம், கட்டளைகளைத் தடைப்படுத்திய உடனேயே தொடரணியின் தலைப்பகுதிக்குச் சூடுகளைத் திருப்பினர். நிர்வகப்படுத்தலைத் தொலைத்த நிலையிலுள்ளவர்கள் மீது வழக்கமான முறையில் பக்கவாட்டுக்களிலிருந்து தாக்குதல் தொடுக்கப்பட்டது.

சமரிலிருந்து பக்கங்களுக்கு விடுபட்டுச் செல்லச் சாத்தியமற்ற மலைப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட நேரடிச்சமர் கெரில்லாக்களை பொறுத்தவரையில் மிகவும் விரும்பத்தக்கதாக இருந்தது. தரையமைப்பால் நெருக்கப்பட்டிருக்கின்ற மலைப்பிரதேசப் பாதைகளில் பெரிய படைகளுடன் தாக்குதலுக்காக நிலையெடுத்துக் கொள்வது சாத்தியமற்றதாகும். ஆகவே தான், கட்டளையாளர்களின் தந்திரோபாய சிந்தனைத் தரம், வீரர்களின் தயார்படுத்தல் தராதரம், அவர்களின் ஆயத மற்றும் உபகரணங்களது தரம் ஆகியவற்றில் நிலைமைகளின் வளர்ச்சிப்போக்குத் தங்கியிருக்கின்றது. அதிகமாகத் தயார்ப்படுத்தப்பட்ட மலைப்பிரதேசத் தாக்குதல் படைபிரிவினரே வெற்றியீட்டுபவர்களாக (ஜேர்மனியர்களிடம் மலைப் பகுதி எகேர்கள் ) இருந்தார்கள்.

சண்டைப் பாதைகளில் செயற்படுகின்ற சிறப்பணிகளின்றி மேலே குறிப்பிட்ட பெருமெடுப்பிலான செயற்பாடுகள் சாத்தியமற்றதாகவே இருந்திருக்கும். பதுங்கித் தாக்குதல் மற்றும் காட்டுத் தேடுதல் முறை போருக்குப் பின்னான காலத்தில் கிராமங்களிலுள்ள வழக்கமான கொள்ளைக்கூட்டத்தினரிற் கெதிராகப் பாரியளவில் பயன்படுத்தப்பட்டது. பகலிலோ குடியானவர்கள் கூட்டுப்பண்ணையில் வேலை செய்தனர். இரவில் கொள்ளைக்கூட்டமாக மாறிக் களவுக்குச் சென்றனர். அத்துடன் இந்த முறை ஆயுததரித்த படையை விட்டோடிகளுக்கு எதிராகவும் இராணுவ பிரிவினரைப் போல உருமறைப்பிலிருந்த கொள்ளையர் அமைப்புக்களுக் கெதிராகவும் பயன்படுத்தப்பட்டது. நோக்கங்களும் வழிவகைகளும் ஒரே மாதிரியானவையாகவே இருந்தன. கண்டுக்கொள்ளல்,பின் தொடர்தல்,குறுகிய இரவு நேரச் சமரில் இழப்படையச்செய்தல், அழிப்புக்காக கொள்ளையர் குழு வெளியே வர தூண்டுதல் போன்றன.

இப்பொழுது இந்த வழிமுறை குறிப்பாகத் தடைசெய்யப்பட்ட வேட்டை,மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக் கெதிராகவும் தண்டனையிலிருந்து தப்பிய கைதிகளைப் பிடிப்பதற்காகவும் வேறு இவ்வாறானவற்றிற்கும் பயன்படுத்தப்படுகின்றது. கெரில்லாக்களை போன்ற காரணங்களாலேயே, கொள்ளையர்களும் மக்கள் வாழ்விடங்களுக்குச் செல்கின்றனர். சிறப்பணிகள் பதுங்கித் தாக்குதலுக்காக கிராமங்களுக்கருகிலும் கிராமங்களின் கரையோரங்களிலும் காத்துக் கிடக்கின்றனர். சத்தமிடக்கூடாது நித்திரைக்கொள்ளக்கூடாது, புகைப்பிடிக்கக் கூடாது, வெளித்தெரியாத தன்மை அதியுச்சமானதாக இருக்க வேண்டும். குடியானவர்கள் அவதானிப்பு திறன் கூடியவர்கள். அத்துடன் காட்டுடனான தொடர்புகளை அவர்கள்பல்வேறுவழிகளில் வைத்திருக்கின்றார்கள். கிராமத்தில் சகலரும் உறவினர்கள் மாத்திரமன்றி நன்றாக அறிமுகமானவர்களுங்கூட. என்னவொன்றாக இருந்தாலும் சகலறிற்கும் உடனேயே தெரிந்துவிடும். வழமைக்கு மாறானதாக இருப்பதாகச் சந்தேகங்கொண்டாலும் யார் காட்டுக்குள் இருக்கின்றார்கள் என்பதில் சந்தேகம் எழுந்தாலும் உடனேயே அது சகல குடியானவர்களுக்கும்தெரிந்துவிடுகின்றது.

பதுங்கித் தாக்குதலுக்காக இருக்கின்ற போது, அசையாமலிருங்கள், காடு அமைதி கொள்ளச் செய்து, தூங்கச்செய்து விடும். எவ்வாறு யாராவதொருவர் கிராமத்திற்குச் செல்கின்றார் என்பதை அவதானிக்க முடியாமலும் இருக்கலாம். அந்த மனிதனும் கிராமத்தை மணிக்கணக்காக அவதானிப்பான். குறிப்பாகக் காலையில் மிகவும் அவதானமாக இருங்கள். காலைநேரம் தீய வேலை செய்பவர்களுக்கான நேரப்பொழுதாகும். ஓநாய்க்குரிய நேரம். கிராமத்தில் இரவு யார் தங்கினானோ, அவன் விடியகாலைப்பொழுதில் அங்கிருந்து புறப்பட்டுப்போவான். அவன் சூழ்நிலையை அவதானிக்கவில்லை, நீங்களோ அவதானித்துள்ளீர்களானால், உங்களிடமே அனுகூலம் இருக்கின்றது.

சூழ்நிலைக்கேற்ப உங்களது ஆயுதங்களையும் உபகரணங்களையும் நீங்களே தெரிவு செய்வீர்கள். ஆனால், காட்டுச் சமருக்குப் பெரிய குழல் விட்ட ஆயுதங்களும் வலிமை மிகு எரிப்பொருட்களுமே மிகவும் பொருத்தமானதாகும். சிறந்த உரு மறைப்பு, சூழ்பொருள்காட்டி, இரவுப் பார்வைச் சாதனம், ஒலியமுக்கி பொருத்தப்பட்ட ஆயதம் ஆகியன அவசியமாகும்.

நுளம்புகளிலிருந்தும் நாய்களிலிருந்தும் காத்துக்கொள்வதற்கான பொருட்கள் இருப்பது மிகவும் விரும்பத்தக்கது. இன்றைய காலத்தில் கூடுதலான இனங்காட்டல் கருவிகள் (அகச்சிவப்பு, ஒலியலை, போன்ற பல்வேறானவை) காணப்படுகின்றன. ஆனாலும் இவை தேவையான இடத்தில் தேவையான நேரத்தில் ஒருபோதும் ஏனோ அகப்படுவதில்லை. அத்துடன் இவற்றை ஏமாற்றவும் பழகிக்கொண்டுவிட்டனர். எடுத்துக்காட்டாக, இரவில் கடக்கவேண்டிய இடத்தில் கைதியைக் கட்டிப்போட்டு விடுகின்றனர். அவனை அகச்சிவப்புக் கருவி கண்டுக்கொண்டுவிட, அவனது ஆட்சிகளே அவனை சுட்டுகொள்கின்றனர். ஆகவே தான், தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தயார்ப்படுத்தப்பட்ட வீரனுக்குப் பிரதானமானது மிருகங்களைப் போலவுள்ள மோப்ப சக்தியாகும். கருவிகளுடன் ஒப்பீடுகையில் இவ்வீரனால் சிந்திக்க முடிவதுடன், வழக்கத்திற்கு மாறாகவும் செயற்பட முடியும்.காட்டுத்தேடுதலில் ஈடுபடுகின்ற போது , நீங்கள் சண்டைப்பாதைகளிலும் காலடிவைக்கின்றீர்கள். உங்களுக்கு என்ன நேரும் என்பது உங்களுக்கு தெரியாது, அதாவது அறியாமை தான் காத்திருக்கின்றது. இந்தச்சொல்லை(அறியாமை) மதிக்கத் தெரிந்திருங்கள். உங்களில் மாத்திரமே நம்பிக்கை கொள்ளவேண்டியிருக்கும். திரைப்படங்களில் வருவது போல, உலங்கு வானூர்தி எப்பொழுதும் வருவதில்லை. வியட்நாமில் அமெரிக்கர்களுக்கு உதவுவதாக ஒருபோதும் உலங்கு வானூர்தி வந்ததில்லை.

தொடர்வான்....

# பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்கியது ஏன்?




ஆசியாவின் முத்து என்றும் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஓர் அற்புதமான அழகிய தீவும் இயற்கை துறைமுகத்தை தன்னகத்தே கொண்ட நான்கு இன மக்கள் வாழும் எம் தாய்நாடான இலங்கை. பிரித்தானியா ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறையில் இருந்து 1948இல் சுதந்திரமடைந்த நாடாக பிரகடனப்படுத்தப்பட்டது. தேயிலை,இறப்பர் முதலான வாசனை திரவியங்கள் செழிக்கும்இந்நாட்டின்இரத்தினகல்,தைத்த ஆடைகள் முதல் கொண்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. 1948க்கு பின்னர் ஓர் தன்னிறைவு பொருளாதாரத்தை நோக்கி நாடு நகர்ந்த வேளை சிங்கள பெரும்பான்மை இனம் பௌத்த மேலாதிக்க சிந்தனையுடன் நாட்டில் சமஅந்தஸ்துடன் வாழ்ந்த தமிழ் இனத்தை அடக்கி ஒடுக்க முயற்சித்த வேளை அழகிய தீவில் கடந்த 30 வருடங்களாக இரத்த ஆறு ஓடியது. இந்த இன மோதல்களில் பல்லாயிரக்கணக்கானோர் மாண்டு போயினர். பலகோடி சொத்துக்கள் நாசமாகின.நாட்டின் முக்கிய பொருளாதார மையங்கள் அழிக்கப்பட்டன. யுத்தத்தை காரணம் காட்டி பாதுகாப்புக்கு பல்லாயிரம் கோடி செலவு செய்யப்பட்டது. 1980 முதல் கொண்டு 2009 வரை யுத்தத்திற்கான செலவீனம் இலங்கையின் பொருளாதாரத்தில் மிகப் பெரிய தாக்கத்தை செலுத்தியது.

இக்காலகட்டங்களில் ஆட்சி வந்த ஆட்சியாளர்கள் முதல் கொண்டு பாதுகாப்பு அமைச்சு பதவிகளில் உள்ளவர்கள் வரை தமிழ் இனத்தை வேரோடு அழிப்பதற்கு கொடிய யுத்தத்தை நடத்தியதன் விளைவு இன்று இந்த நாடு சந்திக்கும் மிகப் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய புள்ளியாக உள்ளது. என்பதில் மாற்றுக்கருத்தில்லை. உண்மையில் நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மஹிந்தராஜபக்ஷ குடும்பம் மட்டும் காரணம் கூற முடியாது 1970களில் இருந்து ஆட்சியில் அமர்ந்த அனைவரும் பொறுப்பு கூற வேண்டியவர்களே அடுத்து 2002ம் ஆண்டு கோர யுத்தம் ஓர் தற்காலிக யுத்த நிறுத்த இணக்கத்துக்கு சென்றது. இதில் நோர்வே நாட்டு பங்களிப்புடன் பேச்சுவார்த்தை இடம் பெற்றன. அந்த அமைதியான சூழலில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப கூடிய சந்தர்ப்பங்கள் வந்து கொண்டிருந்த நேரத்தில்2004ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆழிப் பேரலையில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்து பலகோடி பெறுமதியான சொத்துக்கள் நாசமாகின. யுத்தத்தின் கோரப்பிடியில் இருந்து மெதுவாக மீண்டெழுந்த போது இவ்வாறு ஆழிப்பேரலையில் நாடு சிக்கி திணறியது. இதில் பல நாடுகள் முன்வந்து உதவி செய்ய தொடங்கிய போதிலும் அதன் பின்னர் யுத்தம் வெடித்து 2009ஆம் ஆண்டு யுத்தம் முற்றுப்பெற்ற பொழுது மிகப் பெரும் மனித பேரவலங்கள் இடம்பெற்றதுடன். அந்த இறுதி யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் மீள் எழுச்சி திட்டம் என பல நாடுகளிடம் வட்டி முறையில் கடன்களை வாங்கி குவித்தது மட்டுமன்றி அக் கடன்களுக்காக நாட்டின் பல்வேறு இடங்கள் குத்தகைக்கு கொடுக்கப்பட்டது. இதில் சீனாவிடம் இருந்து பல்லாயிரம் பில்லியன்கள் கடன்கள் வாங்கப்பட்டு அதற்கான வட்டியை அரசு செலுத்தி வந்ததால் நாட்டின் கஜான காலியாகி போனது. யுத்தத்தை வென்றோம் நாட்டையும் கடன் வாங்கியாவது அபிவிருத்தி செய்வோம் அதனூடாக தொடர்ந்து பரம்பரையாக தாமே ஆட்சியில் அமரலாம் என ராஜபக்ஷ குடும்பத்தினரின் எண்ணம் இவ்வாறு நாட்டை கொண்டு போய் அதளபாதளத்தில் தள்ளும் என நினைக்கவில்லை.

நாட்டின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக இருப்பது சுற்றுலாத்துறை. யுத்தம் முடிவுற்றதன் பின்னரான காலப்பகுதியில் சுற்றுலாத்துறை அபரிதமான வளர்ச்சி பாதையை நோக்கி நகர்ந்து கொண்டு இருந்த நிலையில் 2018ல் இடம் பெற்ற ஐ.எஸ்.ஐ.எஸ பயங்கரவாத தாக்குதல் காரணமாக சுற்றுலாத்துறையினரின் வருகை குறைவடையத் தொடங்கியது இத் தாக்குதல் காரணமாக முஸ்லீம் மக்கள் மீதான அடக்கு முறையை சிங்கள அரசு மேற்கொண்டு இஸ்லாமிய இனத்தின் கலாச்சார பண்பாட்டு விடயங்களில் தமது அடக்கு முறையை பிரயோகித்தது. இதன் காரணமாக இலங்கைக்கு உதவி புரிந்து வந்த சவுதி,கட்டார்,குவைத் போன்ற எண்ணெய் வள நாடுகள் தமது உதவிகளை மட்டுப்படுத்த தொடங்கியது. இந்நிலை பொருளாதாரம் மெதுவாக தேய்மான கட்டத்தை நோக்கி நகர்ந்த வேளையில் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்ப்பட்டது. கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் நாட்டை மீட்டெடுக்கும் இரட்சகனாகவும், ஊழல் ஒழிப்புவாதியாக தன்னை உருவகப்படுத்திக்கொண்டு ஆட்சிபீடம் ஏறினார். அத்துடன் பாராளுமன்ற தேர்தல் நடத்தப்பட்டு மகிந்த அவர்கள் பிரமதர் ஆனர். நாட்டில் அடுத்தடுத்து இரு மிகப்பெரும் தேர்தல்கள் இடம்பெற்றது. பொருளாதார நெருக்கடிக்கு அடித்தளம் கொடுப்பதாக அமைத்தது. ஆட்சியில் அமர்ந்த கோத்தபாய அவர்கள் ஆட்சிபீடம் ஏறி ஓர் சில மாதங்களுக்குள் உலகை உலுக்கி எடுத்த கொரோனா என்னும் கொடிய வைரஸ் இலங்கையையும் ஆட்டிப்படைத்தது இலங்கை முழுவதும் முழு முடக்கலுக்கு சென்றது முதலாம் அலை, இரண்டாம் அலை, மூன்றாம் அலை என மூன்று அலைகளின் தாக்கத்தால் பல்லாயிரக்கானோர் பாதிக்கப்பட்டனர்.சுற்றுலாத்துறை இரண்டு வருடங்களாக முற்றாக முடங்கியது குற்றுயிரும் குலையுயிருமாக இருந்த பொருளாதாரம் மரணபடுக்கைக்கு சென்றது. இவ் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உலக தர வல்லரசுகளே ஆட்டம் கண்ட பொழுது இலங்கை எம்மாத்திரம்.அத்துடன் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ எடுத்த முடிவுகளும் பொருளாதார பின்னடைவுக்கு காரணங்களாக அமைந்ததுள்ளன. எமது நாடு விவசாயத்துறையில் முன்னுரிமை உள்ள நாடாகும். விவசாயத்தின் பங்கு பொருளாதாரத்தின் ஏற்றத்துக்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. விவசாய நடவடிக்கைக்கு தேவையான இரசாயன உரம்மற்றும்கிருமிநாசனிகள்உடனடியாக தடை செய்யப்பட்டது மிகப்பெரும் முட்டாள் தனமான செயற்பாடாக பார்க்கப்படுகின்றது. இரசாயன உரப் பாவனையை நிறுத்துவதற்கு முன்னர் இயற்கை உரப்பாவணையை நடைமுறைப்படுத்தி அதன் பின்னர் படிப்படியாக இரசாயன உரப்பாவனையை நிறுத்தி இருக்க வேண்டும்.

இது அவ்வாறு இல்லாமல் உடனடியாக இரசாயன உரத்தை நிறுத்தினர். அதன் தாக்கம் பெரும்போக நெல் எற்பத்தியில் செலுத்தியது. இதனால் எமது நாட்டு நெல் உற்பத்தியுடன் வெளிநாட்டில் இருந்து சிறு அளவு அரிசி இறக்குமதி செய்யப்பட்டு வந்த நிலையில் உரத்தடையில் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டு முற்றுமுழுதாக வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய வேண்டிய ஏற்பட்டது. இதனால் அந்நிய செலவானி அதிகரித்தது. அடுத்து இன்னோர் விடத்து கொரோனா காலத்தில் உயிரிழந்த இஸ்லாமிய குழந்தைகளின் உடல்களை புதைப்பதற்கு பதிலாக எரிந்தமை. இஸ்லாமிய மக்கள் மனங்களில் தீராத வடுவாக அமைந்துடன் இச் செயற்பாட்டால் எண்ணெய்வள வளைகுடா நாடுகள் எரிப்பொருட்களுக்கான கடன் வசதிகளை நிறுத்தியதுடன் கடனடிப்படையில் எரிபொருள் வழங்க டியாது என அறிவித்துவிட்டனர்.இதனால் எரிப்பொருள் தட்டுபாடு மலையேன குவிந்தது. அத்துடன் கோட்டபாய அரசின் சீன உறவு அமெரிக்கா,இந்தியா போன்ற நாடுகளை அந்நியப்படுத்தியது.

அமெரிக்காவின் நிதி உதவிகள் நிறுத்தப்பட்டன. அத்துடன் இலங்கையின் யுத்தகாலங்களில் இடம்பெற்ற யுத்த மீறல்கள்,யுத்த குற்றங்கள், காணமல் ஆக்கப்பட்டோரின் நிலை தொடர்ச்சியான மனித உரிமை மீறல்கள்,பயங்கரவாத தடைச்சட்டமும் அதனூடான செயல்பாடுகள் என அனைத்தையும் காரணம் காட்டி உலக வங்கி நிதியுதவி அழிப்பதை நிறுத்தி கொண்டது. அத்துடன் சிங்கப்பூரில் இருந்து புறப்பட்ட எக்ஸ்பிரஷ் பேர்ல் கப்பல் இலங்கை கடல் எல்லைக்குள் தீ பிடித்து கடலுக்குள் மூழ்கியதால் அதில் இருந்து வெளியேற்றப்பட்ட இரசாயன கழிவுகள் மன்னாரில் இருந்து அம்பாந்தோட்டை வரையிலான கடற்கரை பிரதேசத்தை சுத்திகரிக்க சுமார் பத்துகோடி ரூபா அளவில் இலங்கை செலவழித்துள்ளது அது இன்னும் முற்றுப்பெறவில்லை. இவ்வாறு அரசு எடுக்கும் தவறான முடிவுகள் பொருளாதார கட்டமைப்பை சிதைத்துள்ளது. இவ்வாறான முட்டாள் தனமான செயல்பாட்டின் எதிரொலி மக்கள் கிளர்ச்சி வெடித்து ராஜபக்ஷ குடும்ப அரசியலை நாட்டில் இருந்து அப்புறபடுத்தி உள்ளது தற்பொழுது ரணில் அவர்கள் ஆட்சி பீடம் ஏறியுள்ள நிலையில் நாட்டின் பொருளாதார நெருக்கடியை எவ்வாறு மீட்டெடுப்பது என திணறி வருகின்றார். இன்று இப் பொருளாதார அமைப்பால் ஒட்டு மொத்த இலங்கையும் மிகப் பெரும் நெருக்கடிக்குள் சிக்கி தவிக்கின்றன. பல்வேறு பிரதேசங்களில் ஒரு நேர உணவைக் கூட உண்ண முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. தற்பொழுது புலம் பெயர் தமிழ் அமைப்புக்களுடன் தொர்பு கொண்டு இப்பொருளாதார நெருக்கடியை அரசு சமாளிக்க முயற்சிக்கின்றது. பல புலம்யெர் தமிழ் அமைப்புக்கள் தாம் கைகொடுத்து உதவுவதாயின் இலங்கையில் காணப்படும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தீர்வை வழங்க வேண்டும் என நிபந்தனைகள் விதித்துள்ளதாக தெரிய வருகின்றது. இலங்கை அரசு குறைந்தபட்சம் அரசியல் கைதிகளை விடுதலை செய்தால் புலம்பெயர் அமைப்புக்கள் உதவ தயார் என கூறியுள்ளனர்.

ஆகவே அரசு இது தொடர்பில் சரியான முறையில் செயல்படுமாயின் உலக நாடுகள் கூட உதவ தயாராய் உள்ளன. தற்பொழுது தடைவிதிக்கப்பட்டிருந்த சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடையை நீக்கி அரசுநல்லேன்ன சமிஞ்சை காட்டியுள்ள நிலையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாயின் இலங்கை அரசுடன் புலம் பெயர் தமிழ் சமூகம், பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீள கைக்கொடுக்கும்.

அத்துடன் வரவிருக்கும் ஐ.நா கூட்டத் தொடரில் இலங்கைக்கு விடுக்கப்படும் அழுத்தம் குறைவதற்கு சாத்தியமாகவும் இருக்கும். எனவே இலங்கை அரசு தமிழ் மக்களின் குறைந்தபட்ச தீர்வான கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான முடிவு இதனை நிறைவேற்றினால் உலக வங்கி உட்பட பலநாடுகள் இலங்கைக்கு உதவ புலம் பெயர் அமைப்புக்கள் அழுத்தம் கொடுக்கலாம். அத்துடன் இருளில் மூழ்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்து சேர்க்க இனமத பேதமின்றி அரசுடன் அணைவரும் கைகோர்க்க வேண்டும்.

அத்துடன் அநாவசியமான செயல்திட்டங்களை குறைத்தல் எரிபொருள் பாவனை போன்ற செலவினங்களை முடிந்த வரை குறைப்பதுடன் விவசாயதுறை அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும். முடங்கி போய்யுள்ள பெருந்தோட்ட ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும். இலங்கையில் பொருளாதார துறை ஆணிவேராக உள்ள தேயிலை தோட்ட தொழிலாளர்களின் சம்பள முரண்பாட்டை நீக்கி அவர்கள் ஊக்கப்படுத்த வேண்டும். சுற்றுலாத் தளங்களை உருவாக்க வேண்டும். இளையவர்,யுவதிகளை அழிக்கும் போதைப்பொருள் பாவனைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நாட்டில் பதுக்கல் செயல்பாட்டில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் கடுமையாக தண்டிக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டு பொருளாதார சகதிக்குள் வீழ்ந்துள்ள எமது தாய்நாட்டை மீட்டெடுக்க அனைவரும் அணிதிரள்வோம்.

**அக்ஷயா**

# பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் இருப்பது ஆபத்து!




இலங்கை 1948 இல் சுதந்திரம் அடைந்ததன் பின்னர். நாட்டில் பல கிளர்ச்சிகள். பல அரச எதிர்ப்பு போராட்டங்கள். இனமோதல்கள் என பல போராட்டங்கள் இடம்பெற்று வந்தன. இதில் குறிப்பாக 1958கலவரம்.1968 கலவரம். அதன் பின்னர் இடம்பெற்று தமிழர் அழிப்பு கலவரமான 1983இல் யூலைக்கலவரம் என்பன முக்கியமானவையாக காணப்பட்டன. 1978க்கு முன்னர் இடம்பெற்ற கலவரங்களை அடக்குவதற்கு அவ்வப் போது அவசரக்காலசட்டம் அமுல்படுத்தப்பட்டு வந்த நிலையில் 1970க்கு பின்னர் தமிழர்கள் தமது தன்னாட்சி உரிமையை பெற ஆயத ரீதியாக போராட ஆரம்பித்த பொழுது தமிழர்களின் ஆயத ரீதியான போராட்டத்தை நசுக்குவதற்காகவும் போராட்டத்தை கொடூரமாக கொண்டு அடக்குவதற்காகவும் 1979ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இவ் பயங்கரவாத தடைச்சட்டம் தமிழர்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தில் பல இழப்புக்களையும். தடைகளையும் உருவாக்கியது. இப் பயங்கரவாத தடைச்சட்டத்தில் உள்ள விடயங்கள் மிகவும் ஆபத்தானவையாகவும் தனி மனித சுதந்திரத்தை அழிக்கும் நிலைக்கு ஒப்பானதாக பார்க்கப்பட்டு வருகின்றது.

இவ் பயங்கரவாத தடைச்சட்டத்திற்குள் அடங்கியுள்ள விடயங்களாக எவ் வேளையிலும் யாரையும் கைது செய்யும் உரிமை. போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் யாராகிலும் சுட்டுக்கொல்லும் அனுமதி கைது செய்பவர்களை விசாரனை இன்றி சிறையில் அடைக்கப்பட அனுமதி. எக்காரணமுமின்றி கைது செய்யும் உரிமை பல ஆபத்தான சரத்துக்கள் உள்வாங்கப்பட்ட சட்டம் தான் இவ் பயங்கரவாத தடைச்சட்டம் 1980களின் பின்னர் தமிழர் பகுதிகளில் பெரும் விஸ்பரூம் எடுத்து ருத்திரதாண்டவம் ஆடியது. இச்சட்டத்தை பயன்படுத்தும். இலங்கையின் முப்படையினரும் எண்ணிலடங்கா குற்றங்களை புரிந்தனர். வகை தொகையின்றி புலிகளுடன் தொடர்பு என்று கூறி கைது செய்யப்பட்டு வருடக்கணக்கில் சிறையில் அடைக்கப்பட்டனர். இதில் பலர் சிறைச்சாலைக்குள் மரணத்தையும் தழுவி விட்டனர். இப் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி அக்காலங்களில் படையினர் பலரை காரணமின்றி சுட்டுக் கொன்றனர். பலநூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டு பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் மூடி மறைக்கப்பட்ட துயரத்தோய்ந்த வரலாறுகள் தமிழர் பகுதியில் பதிவாகின. இச்சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் இலங்கையில் சிறைச்சாலைகள் அதிகரித்தன எனக் கூறலாம். கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் சிறைச்சாலைக்குள் வைத்து சிறைக்கலவரம் என்ற போர்வையில் படுகொலைகள் செய்யப்பட்டனர். இதில் வெலிகடைச்சிறைச்சாலை முக்கிய பங்கு வகித்ததுடன் தமிழர் மனங்களில் மிகவும் திகிலான ஒரு சிறைச்சாலையாக பார்க்கப்பட்டு வருகின்றது.

அதனுடன் பக்கீன் சிறைச்சாலை.பூசா. அனுராதபுர சிறைச்சாலை போன்றவை மிகப்பிரபலமானவை. 1990களின் பின்னர் தமிழர் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயம் வேலைவாய்ப்பிற்காகவும். மருத்துவத்திற்காகவும் மற்றும் வெளிநாடு செல்லவும் என தென்பகுதிக்கு சென்ற பலர் இவ் பயங்கரவாத தடைச்சட்டத்தை காரணம் காட்டி கைது செய்யப்பட்டு சிறையில் விசாரணை இன்றி அடைக்கப்பட்டனர். இதில் பலர் காணாமல் போய் உள்ளனர். இவ் பயங்கரவாத தடைச்சட்டத்தில் அக்காலங்களில் தனியே பாதுகாப்பு படையினர் மட்டும் செல்வாக்கு செலுத்தவில்லை.

1978இல் ஜனாதிபதியான ஜே.ஆர் ஜெயவர்த்தன ஆட்சியில் அமைச்சர்களாக இருந்த இனத் துவேசப்படைத்த சிறில் மத்தீயூ. காமினி திசான நாயக்க, லலித் அத்துலத் முதலி.ரஞ்சன் விஜேரத்தினர் அனுரத்த ரத்வத்தா கோத்தபாய ராஜபக்ஷ போன்றவர்கள் பாதுகாப்பு அமைச்சர்களாக இருந்த பொழுது அவர்களின் வழிக்காட்டல்களில் பலர் கைது செய்யப்பட்டு காணாமல் போன சம்பவங்களும் உள்ளன. இவ் பயங்கரவாத தடைச்சட்டத்தை காட்டி அவசரக்கால சட்டம் என்ற போர்வையில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டு கிழக்கு மாகாணத்தில் தமிழர் பகுதிகளில் பல படுகொலை அரங்கேறின. 1995க்கு பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றி பின்னர் திறந்த வெளி சிறைச்சாலை போல அன்று யாழ்ப்பாணம் காணப்பட்டது. உத்தியோக பற்றற்ற ஊரடங்கு போல். யாழ் நகர் காட்சியழித்து. வெளி மாவட்ட தொடர்பின்றி காணப்பட்டது. அச்சமயர்களின் யாழ்ப்பாணத்தில் பலர் கைது செய்யப்பட்டு காணமல் ஆக்கப்பட்டதுடன். இக் காலப்பகுதியிலே மிகக் கொடூர படுகொலையிலான செம்மணி படுகொலை அரங்கேறியது. தமிழர்களின் வாய்திறந்து தமது ஆதங்கத்தை கூற முடியாதவாறு வாய்க்கு பூட்டு வைத்தது போல் இவ் பயங்கரவாத தடைச்சட்டம் காணப்படுகின்றது. இச்சட்டத்தை அகற்ற கோரி பலமுறைகளில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பல உலக வல்லரசுகள் கூட இச்சட்டத்தைநீக்கிசொல்லி அழுத்தங்கள் பியோகித்தனர்.ஆனாலும் இலங்கை ஆட்சியில் அமருகின்றவர்கள். தமது ஆட்சியை தக்கவைக்க இவ் பயங்கரவாத தடைச்சட்டத்தையும் அவசரகாலசட்டத்தையும் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது ஓர் அசிங்கமான விடயமாகும். 2018ல் இலங்கையில் இடம் பெற்ற ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்கதலின் பின்னர் முஸ்லீம் இன மக்கள் மீது இவ் பயங்கரவாத தடைச்சட்டம் பாய்ந்தது. இச் சட்டத்தின் பிரகாரம் பல அப்பாவி முஸ்லீம் இளைஞர்கள். யுவதிகள் கைதி செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். முஸ்லீம் இனத்தின் கலாச்சார பண்பாட்டு உடையான பர்தா அணிவது முழுமையாக மூடி அணிவது தடைசெய்யப்பட்டது. இவ்வாறு இச் சட்டத்தின் மூலம் முஸ்லீம் மக்களும் பாதிக்கப்பட்டனர். தமிழர்கள் மீது தனியே திணிக்கப்பட்ட இச் சட்டமானது. முஸ்லீம் மக்கள் மீது திணிக்கப்படும் வரை அவர்களுக்கு இதன் கொடூரம் தெரியவில்லை. 2018க்கு பின்னர் அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

இலங்கையில் ஜனாபதி ஜே.ஆர் தொடக்கம் தற்பொழுது உள்ள ரணில் வரை இவ் பயங்கரவாத தடைச்சட்டத்தினை தமது அரசியல் நலனுக்காக பாவித்து வருவது ஆபத்தான விடயமாகும். 2018 இறுதியில் ஆட்சி பீடம் ஏறிய கோத்தபாய அவர்களை பொருளாதார நெருக்கடி. விலைவாசி ஏற்றம். எரிபொருள் பிரச்சனை என பல்வேறு பிரச்சனைகளை காரணம் காட்டி பிரதமராய் இருந்த மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பசில்ராஜபக்ஷ. கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரை ஆட்சியில் இருந்து அகற்ற மக்கள் கிளர்ச்சி உருவாகி. காலிமுகத்திடலில் நூறு நாட்கள் கடந்து போராட்டம் இடம் பெற்றது.

இப் போராட்டம் கோத்தபாய அவர்கள் ஆட்சியில் இருந்து வெளியேறும் வரை இடம் பெற்றது இவ் கிளர்ச்சியில் வன்முறைகளும் இடம் பெற்றன. பல அமைச்சர்களின் வீடுகள். தீக்கரையாக்கப்பட்டன ஜனாதிபதி மாளிகை பிரதமர் அலுவலகம் என்பன கிளர்ச்சியாளர்கள் சேதமாக்கப்பட்டன. அதன் பின்னர் ரணில் அவர்கள் ஆட்சிபீடம் ஏறினார். இவ்கிளர்ச்சியில் தலைமை தாங்கியவர்கள்.போராட்டகார்கள் அதற்கு உறுதுணையாக நின்றவர்கள். உணவு வழங்கியவர்கள் என பலரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு வருகின்றனர். அவர்களில் தலைமை தாங்கிய சிலருக்கு 90நாள் விசாரனை இன்றி வைக்கும் பயங்கரவாத தடைச்சட்ட விதிமுறைக்கு அமைய தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதில் பல பிக்குகள் அடங்குகின்றனர். தற்பொழுது சிங்கள மக்களும் இவ் பயங்கரவாத தடைச்சட்டத்தின் விளைவை அனுபவிக்க தொடங்கியுள்ளனர்.

இச்சட்டத்தை கொடூரத்தை அவர்கள் பரிந்து கொள்ள தொடங்கி விட்டனர் தமிழர்களுக்கு இச் சட்டம் பாய்ந்த பொழுது இச் சட்டத்தின் சரத்துக்கள் போதுமானது அல்ல இன்னும் இறுக்கமாக பயன்படுத்த வேண்டும் என பௌத்த மகா சங்கங்கள் மற்றும் தேரர்கள் கூறி வந்தனர். இப் பொழுது இச் சட்டமானது அவ் மகா சங்கத்தின் தேரர்களையே உள்ளே கொண்டு போய் வைத்துள்ளது. தற்பொழுது மனித உரிமை அமைப்புக்கள். சர்வதேச மன்னிப்பு சபை .ஐ.நா மன்றம் .புலம் பெயர் அமைப்புக்கள் எதிர் கட்சிகள். பௌத்த பீடங்கள். சமயத்தலைவர்கள் என அனைவரும் இவ் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண்டும் என குரல் கொடுத்து வரும் நிலையில் இச்சட்டத்தை நீக்கி தேசிய பாதுகாப்புச்சட்டம் என்ற புதியதோர் சட்டத்தை உருவாக்க முயற்சித்து வருவதாக அரச தரப்பு தெரிவிக்கின்றது.

புலம் பெயர் தமிழ் அமைப்புக்களுடனான இணையவழி மூலம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது புலம் பெயர் கனடிய தமிழ் அமைப்பு இரண்டு நிபத்தனைகள் விதித்திருந்தன. பயங்காரவாத தடைச்சட்டத்தினை நீக்கி சிறையில் உள்ளவர்கள் விடுதலை செய்ய வேண்டும் என கேட்டிருந்தனர். அதற்கு அரச தரப்பு சம்மதம் அளித்திருப்பதாக தெரியவருகிறது. எவ்வாறாயினும் பயங்கரவாத தடைச்சட்டமானது எதிர்காலங்களில் ஆட்சிமாற்றம் ஏற்படும் பொழுது மீண்டும் அமுல்படுத்துவதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை ஏனெனில் 2002ஆம் ஆண்டு சந்திரிக்கா.ரணில் புலிகளுடனா நோர்வே மத்தியஸ்துடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தையின் போது பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்றும் புலிகள் மீது திணிக்கப்பட்ட "பயங்கரவாதிகள்" என்ற பதம் பாவிக்கக்கூடாது எனக் கூறப்பட்டது.

ஆனால் பின்னர் மகிந்த அவர்கள் ஆட்சியில் ஏறியவுடன் இச்சட்டமானது மீண்டும் அமுலுக்கு வந்தது. ஆகவே இச்சட்டம் இலங்கையில் இருந்து முற்றாக நீங்கும் என்று கூறமுடியாது அத்துடன் இச்சட்டத்தின் மூலம் 1981க்கு பின்னர் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளில் தற்பொழுது 98பேர் தான் இருப்பதாக கூறப்படுவதும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட மிகுதியானோரின் நிலை என்ன என்பது புரியாத புதிராகவே உள்ளது. கடந்த 30வருட கால இன மோதலில் பல்லாயிரகணக்கானோர் கைது செய்யப்பட்டனர். இதில் அவ்வப்பொழுதுகளில் சொற்பமானவர்களே விடுதலை செய்யப்பட்டனர் மிகுதியானவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரை கேள்விகுறியாகவே உள்ளது. இது சம்மந்தமாக தமிழ் அரசியல்வாதிகளிடம் எதுவித சரியான தரவுகள் இருப்பதாக தெரியவில்லை என்பதே உண்மையான விடயமாகும்.

முப்படையினர் விடுதலைப்புலிகள். மற்றும் ஆயுதக்குழுக்கள் என அனைவராலும் கைது செய்யப்பட்டு காணாமல்போனவர்களின் விபரம் எதுவும் சரியான முறையில் இல்லை. என்பதே உண்மை. தற்பொழுது சிறையில் உள்ள 98அரசியல் கைதிகளின் விடுதலையாவது இடம் பெறட்டும். தமிழ்மக்களை அனுதினமும் வாட்டி வதைத்த இவ் பயங்கரவாத தடைச்சட்டமானது. முஸ்லீம் - சிங்கள மக்களையும் வாட்டி வதைக்கின்றது. இதில் இருந்து விடுபட இச் சட்டமானது எமது தாய்நாட்டில் இருந்து அகன்று நல்லாட்சி மலர வேண்டும் என இலங்கை நாட்டில் உள்ள மொத்த இனங்களின் வேண்டுதல் ஆகும்.

**தமிழ் கிறுக்கன்**

# இலங்கை நெருக்கடி : "மத அரசியல்" விளைவித்த துன்பங்கள் – வரலாறு மாற்றியமைக்கப்படுமா?



**ஜனாதிபதி மாளிகையை பார்க்க குவிந்த கூட்டம்**

இப்போது இரண்டு பெரிய ஆடம்பர வாயில்களில் பாதுகாப்புப் பணியாளர்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். இந்த வாயில்களில் "கோட்டா போனார்" மற்றும் "ராஜபக்ஷ இல்லாத இலங்கை" என எழுதப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்பு வரை, இந்த வாயில்களுக்குள் இருக்கும் பிரமாண்டமான அதிபர் மாளிகை ஒரு அருங்காட்சியகம் போல் இருந்தது.

முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்ஷ எவ்வளவு ஆடம்பரமாக வாழ்ந்தார் என்பதை பார்ப்பதற்காக கொழும்பு மற்றும் வெளி நகரங்களில் இருந்து வந்த இலங்கை மக்கள் ஒன்றரை கிலோமீட்டர் வரை நீண்டிருக்கும் வரிசையில் அமைதியாக காத்திருக்கின்றனர்.

வந்தவர்களில் சிங்களர்கள், தமிழ் இந்துக்கள், தமிழ் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் அடங்குவர்.

அங்கு நான் குணசேகராவை சந்தித்தேன். அவர் கையில் ஒரு சிறு குழந்தையும் இருந்தது. "இங்கே நிற்கும் நாங்கள் அனைவரும் இலங்கையின் குடிமக்கள். மதம், சாதி, வரலாறு அனைத்தும் இனி புதிய முறையில் எழுதப்படும்" என்றார் அவர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் தீர்வதற்கான அறிகுறிகள் எதுவுமே தென்படாத நிலையில், இங்குள்ள சமூக மற்றும் மத உறவுகளில் ஒரு தனித்துவம் காணப்படுகின்றது என்பதே யதார்த்தம். அதுதான் அதிகாரத்தில் இல்லாத ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிரான ஒற்றுமை.

மத்திய கொழும்பில் உள்ள சினமன் கிராண்ட் ஹோட்டலுக்குப் பின்னால் ஒரு அழகான ஏரியின் கரையில் ஒரு பெரிய புத்தர் கோவில் உள்ளது.

சில மாதங்களுக்கு முன்பு வரை ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் வாரந்தோறும் இந்த புத்தர் கோவிலுக்கு செல்வது வழக்கம்.

ஆனால் இப்போது கோட்டாபய நாட்டை விட்டு வெளியேறிவிட்டார், மஹிந்த ராஜபக்ஷ யாருக்கும்தெரியாத இடத்தில் வசித்து வருகிறார்.

விலைவாசி உயர்வு, உணவு மற்றும் எரிப்பொருள் தட்டுப்பாடு காரணமாக இலங்கையில் பல மாதங்களாக போராட்டங்கள் நடைபெற்று வந்த நிலையில், பிரதமர் அலுவலகம் முதல் அதிபர் மாளிகை, அதிபர் அலுவலகம் வரை போராட்டக்காரர்கள் ஆக்கிரமித்தனர். தற்போது இந்த கட்டடங்கள் காலி செய்யப்பட்டுவிட்டன.

இலங்கையின் இரண்டரை கோடி மக்கள் தொகையில் நான்கில் மூன்று பங்கினர்,பௌத்த மதத்தைப் பின்பற்றும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

பெரும்பான்மை வர்க்க அரசியலின் ஆதிக்கத்தால், இலங்கையின் சிறுபான்மை பிரிவினரிடையே அவர்கள் தமிழர்களாக இருந்தாலும் சரி, முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, வெறுப்பு அதிகரித்துள்ளது. "நாட்டில் நிலவிய வெறுப்புணர்வு" ஏறக்குறைய எல்லா முந்தைய அரசுகளும் பெரும்பான்மை வகுப்பினரின் நலன்களைக் கவனித்தன. இது தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியது.

தமிழர் உரிமைகளுக்கான உள்நாட்டுப் போர் பல தசாப்தங்களுக்கு நீடித்தது. 2009ல், அப்போதைய அதிபர் மஹிந்த ராஜபக்ஷவும் அவரது பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவும் அதை முடிவுக்கு கொண்டுவந்த பெருமையை பெற்றனர்.

உடனடியாக நடந்த தேர்தல்களில், சிங்கள தேசியவாதத்தின் மீது சவாரி செய்து ராஜபக்ஷ குடும்பம் மீண்டும் ஆட்சிக்கு வந்தது. "இந்த தேர்தலில் சிங்கள வாக்குகளால் வெற்றி பெற்றுவிடுவேன் என்று எனக்குத்தெரியும்," என்று தனது வெற்றிக்குப் பிறகு கோட்டாபய கூறினார்.

"நாட்டில் பரஸ்பர பிரிவினை சூழல் நிலவியது உண்மைதான். 30 ஆண்டுகளாக நடந்த உள்நாட்டுப்போரும் இதற்கு காரணமாக அமைந்தது. அரசியலுக்காக மனிதன் அல்லது மதம் பயன்படுத்தப்படுகிறது."என்று கொழும்பில் உள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீபோதி கோவிலின் தலைமை பூசாரி யதகாம ராகுல் கூறினார்.

ஸ்ரீபோதி கோயிலின் தலைமை பூசாரி யதகமா ராகுல் "நாங்கள் மதத்தை விட மனித நேயத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கிறோம். எந்த ஊருக்கு சென்றாலும் பௌத்த குடும்பத்திற்கு சொந்தமான வீடு ஒன்று இருந்தால், அதற்கு அருகில் முஸ்லிம் குடும்பம், எதிரே தமிழ் குடும்பம் இருக்கும். நாடு மேலும் முன்னேற வேண்டுமானால், அனைவரும் ஒன்றாக வாழ வேண்டும்,"என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

கடந்த பல தசாப்தங்களாக இலங்கையில் மதவாத பதற்றங்கள் அதிகரித்து வந்தன. 2019 ஈஸ்டர் தினத்தன்று கொழும்பில் நடந்த குண்டுவெடிப்புகளில் 250 க்கும் மேற்பட்டோர் இறந்தனர்.

**நிலைமை மாறும் என்ற நம்பிக்கை**

இந்த தாக்குதலுக்குப்பின்னால் ஐஎஸ் அமைப்பின் சில உள்ளூர் பிரிவுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. அதன் பின்னர் நிலைமை மேலும் மோசமடைந்தது என இங்கு வாழும் பல தமிழ் முஸ்லிம்கள் கூறுகின்றனர்.

"நாங்கள் முஸ்லிம்களாக இருப்பதால் பல பிரச்சனைகளை எதிர்கொள்கிறோம். ஈஸ்டர் குண்டுவெடிப்புகளுக்குப் பிறகு அது மேலும் அதிகரித்தது. முஸ்லிம் சமூகத்திற்கும் அந்தத் தாக்குதல்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. தேர்தலில் வெற்றி பெற நாங்கள் குறிவைக்கப்பட்டோம்,"என்று கொழும்பில் உள்ள அக்பர் ஜீம்மா மசூதியின் இமாம் ரிஃபான் கூறுகிறார்.

"கோவிட் வந்த பிறகு இறந்தவர்களை புதைக்க ராஜபக்ஷ சகோதரர்கள் அனுமதிக்கவில்லை. உடல்கள் எரியூட்டப்பட்டன. அவர்கள் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட நிலையில், எதிர்காலம் நன்றாக இருக்கும் என்று நம்புகிறேன்."என்று அவர் மேலும் கூறினார்.

அரசுக்கு எதிரான போராட்டங்களின் மையமாக இருந்த "கால் ஃபேஸில்" நான் அஷ்ஃபக் என்ற கல்லூரி மாணவரை சந்தித்தேன்.

"முந்தைய அரசுகள் மாணவர் சேர்க்கையில் கூட முஸ்லிம்களின் சதவிகிதத்தை குறைவாக வைத்திருந்தன. இப்போது நிலைமை மேம்படக்கூடும்." என்கிறார் அவர்.

கணிசமான சிங்கள மக்கள் தங்களை எதிர்பார்கள் என்று சிங்கள தேசியவாதத்தை முன்னிறுத்திய ராஜபக்ஷ குடும்பம் எதிர்பார்க்கவில்லை.

தாங்கள் பெரும்பான்மையாக இருப்பதால் சிறுபான்மை சமூகத்தை "வெளியாட்கள்" என்று கண்மூடித்தனமாக கருதிய பலரும்அதில் இருந்தனர்.

**"நாம் ஒற்றுமையாக வாழ வேண்டும்"**

குமாரா பரேரா செல்போன் கடை நடத்திவருகிறார்."நாட்டின் நிலை இப்படியாகிவிட்டதே" என்று அவர் வேதனைப்படுகிறார்.

"இலங்கையில் தமிழர் உரிமைக்காக உள்நாட்டுப் போர் நடந்தது. அது புரிகிறது. அதன்பிறகு நாட்டில் அமைதி திரும்பியது. அதுவும் புரிகிறது. ஆனால் திடீரென்று ஒரு விசித்திரமான தேசியவாதம் பரவத் தொடங்கியது. ஆரம்பத்தில் பலர் இதை சரியானது என்று கூட கருதியிருக்கலாம். ஆனால் உணவு தட்டுப்பாடு நிலவும் இந்த நேரத்தில் மக்கள் அதைப் பற்றி சிந்திப்பதுகூட இல்லை,"என்கிறார் அவர்.

ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிரான அமைதியானபோராட்டத்தில்ராணுவத்தின் நிலைப்பாடும் சற்று வித்தியாசமாகவே இருந்தது.

ராணுவத்தில் உள்ள பெரும்பாலான வீரர்கள் மற்றும் தளபதிகள் சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவர்கள். இருந்தபோதிலும் இதுவரை போராட்டக்காரர்கள் மீதான நடவடிக்கை மிகவும் சாதாரணமாகவும், மென்மையாகவும் இருக்கிறது.

**அரசியல் ஆய்வாளர் பவனி ஃபொன்சேகா**

"நாட்டில் உள்நாட்டுப் போர் முடிவடைந்து 13 ஆண்டுகளுக்குப் பிறகு இது நடப்பது ஆச்சரியமாக இருக்கிறது" என்று கொழும்பில் உள்ள மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் அரசியல் ஆய்வாளர் பவனி ஃபொன்சேகா கூறுகிறார்.

"மீண்டும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்ற உணர்வு சமூகங்கள் மத்தியில் மெதுவாக வளர்ந்து வருகிறது. இந்த எதிர்ப்பு போராட்டங்கள் காரணமாக, பரஸ்பர கருத்து, உரையாடல் மற்றும் விவாதம் ஆகியவற்றின் புதிய வழிகள் திறக்கப்படுகின்றன. இதன் மூலம் மக்கள் கருத்துக்களை பரிமாறிக்கொண்டு, பிரச்சனைகளை தீர்க்கமுடியும்," என்று அவர் குறிப்பிட்டார்.

**நிதின் ஸ்ரீவஸ்தவா**

# முஸ்லீம் அமைப்புகள் மீதான தடை : மீள்பரிசீலனை செய்யப்படுமா?



சட்டத்தரணி எம்.எம்.சுஹைர்



அம்பிகா சற்குணநாதன்

"அகில இலங்கை ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதுல் முஹம்மதிய்யாவினால் (JASM) வழங்கப்பட்ட அநாதை பராமரிப்பு நிதியுதவி இடைநிறுத்தப்பட்டமையினால் எனது பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க மிகவும் சிரமமாக உள்ளது. இதனால் எமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது" என்கிறார் கொழும்பு 14 கிரோண்ட்பாஸ் பிரதேசத்தினைச் சேர்ந்த 41 வயதான பாத்திமா பர்சானா.

மூன்று பெண் மற்றும் இரண்டு ஆண் பிள்ளைகளின் தாயாரான இவரது கணவர் சிறுநீரக நோய் காரணமாக கடந்த 2012ஆம் ஆண்டு காலமானார். இதனையடுத்து தையல் தொழில் மேற்கொண்டு இவர் குடும்பத்தினை பராமரித்து வருகின்றார். எனினும் கொவிட் மூன்றாவது அலையினை அடுத்து இவரது தொழில் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளமையினால் எந்தவித வருமானமும் இந்த குடும்பத்திற்கு கிடைப்பதில்லை. சுமார் 1.5 பேர்ச் அளவுடைய காணித் துண்டொன்றில் அறையொன்று கூட இல்லாது நிர்மாணிக்கப்பட்ட சிறிய வீட்டிலேயே இந்த குடும்பம் வாழ்ந்து வருகின்றது.

கடந்த 2013ஆம் ஆண்டிலிருந்து JASM இன் "அநாதைகள் பராமரிப்பு" திட்டத்தின் கீழ் பர்சானாவின் மூன்றாவது மகள் நிதியுதவி செய்து வருகின்றார். ஆரம்பத்தில் ஒரு முறை 7000 ரூபா பெற்ற குறித்த சிறுமி இறுதியாக கடந்த ஏப்ரல் முதல் வாரத்தில் பல மாதங்களுக்குரிய பணத்தைச் சேர்த்து மொத்தமாக 45000 ரூபா பெற்றுள்ளார்.

"ஒரு வருடத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகளில் எனது மகளிற்கான நிதி கிடைக்கும். இந்த நிதியினை அனைத்து பிள்ளைகளின் கல்விச் செலவிற்காகவும், குடும்பத் தேவைகளுக்காகவும் பயன்படுத்துவேன். தற்போது இந்த அமைப்பு தடை செய்யப்பட்டுள்ளமையினால் அவர்கள் நிதியுதவியினை நிறுத்திவிட்டனர். இதனால் மிகவும் கஷ்டமாக உள்ளது" என அவர் தெரிவித்தார். இந்த நிதியுதவி நிறுத்தப்பட்டமையினால் எங்களைப் போன்ற பல தேவையுடைய குடும்பங்கள் இன்று அநாதரவாக்கப்பட்டுள் ளன என பர்சானா மேலும் கூறினார். இது போன்ற சுமார் 100 அநாதை பிள்ளை களுக்கு பராமரிப்பு நிதியுதவி வழங்கி வந்த தாக JASM அமைப்பு கூறுகிறது.

**முஸ்லிம் அமைப்புக்கள் மீதான தடை**

11 அமைப்புக்கள் கடந்த ஏப்ரல் 13ஆம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியின் ஊடாக தடை செய்யப்பட்டுள்ளன.

தடைசெய்யப்பட்ட அமைப்புக்களின் விபரம்

01.அகில இலங்கை ஜம்இய்யது அன்சாரிஸ் சுன்னதுல் முஹம்மதிய்யா (JASM)
02.அகில இலங்கை தௌஹீத் ஜமாஅத் (ACTJ)
03.ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத் (SLTJ)
04.ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் (SLISM)
05.ஐக்கிய தௌஹீத் ஜமாஅத் (UTJ)
06.சிலோன் தௌஹீத் ஜமாஅத் (CTJ)
07.தாருல் அதர் அல்லது ஜாமிஉல் அதர் பள்ளிவாசல்
08.சேவ் த பேர்ள்ஸ்
09.ஈராக் மற்றும் சிரியா இஸ்லாமிய அரசு
10.அல்கைதா அமைப்பு
11.சுப்பர் முஸ்லிம்

இவ்வாறு தடை செய்யப்பட்ட அமைப்புக்களில் JASM மற்றும் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் ஆகியன நீண்ட வரலாற்றினைக் கொண்ட அமைப்புக்களாக காணப்படுகின்றன.

JASM

அஷ்ஷெய்க் அப்துல் ஹமீத் அல் பகரி என்பவரினால் 1947ஆம் ஆண்டு குருநாகல் மாவட்டத்தின் பறகஹதெனியா கிராமத்தில் இந்த அமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. இந்த அமைப்பின் தலைவராக 1983ஆம் ஆண்டு முதல் தடை செய்யப்படும் வரை அஷ்ஷெய்க் என்.பீ.எம். அபூபக்கர் சித்தீக் செயற்பட்டு வந்தார். ஏற்கனவே முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த இந்த அமைப்பு கடந்த 2005.06.02ஆம் திகதி கம்பனி பதிவாளர் திணைக்களத்தில் உத்தரவாதமளிக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யப்பட்டது.

இதற்கு மேலதிகமாக 2009ஆம் ஆண்டின் 59ஆம் இலக்க சட்டத்தின் கீழ் 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் 21ஆம் திகதி இந்த அமைப்பு பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்டது.இந்த அமைப்பினால் அநாதை பராமரிப்பு நிதியுதவி, உயர் கல்விக்கான புலமைப்பரிசில், பள்ளிவாசல்கள் மற்றும் வீடுகள் நிர்மாணம், சுயதொழில் உதவி என பல கோடி ரூபா பெறுமதியான பல்வேறு செயற்திட்டங்கள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இதேவேளை, 1990ஆம் ஆண்டு முதல் தடை செய்யப்படும் வரை நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்களுக்கு துயுளுஆ இனால் வழங்கப்பட்டு வந்த உயர் கல்விக்கான புலமைப்பரிசில் திட்டமும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

"எமது அமைப்பினை தடை செய்வார்கள் என ஒரு போதும் நாங்கள் நினைக்கவில்லை. எனினும் ரமழான் மாதத்தின் முதல் நாள் எமது அமைப்பினை தடை செய்தமை மிகவும் கவலையளிக்கின்றது" என தடைசெய்யப்படும் வரை அமைப்பின் பொதுச் செயலாளராக பணியாற்றிய ஏ.எல் கலீலுர் ரஹ்மான் தெரிவித்தார்.

"எமது பக்க நியாயங்களை கூறுவதற்கு எந்த சந்தர்ப்பமும் வழங்கப்படாமலேயே எமது அமைப்பினை தடை செய்துள்ளனர்" எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த அமைப்பு மாத்திரமல்லாமல், தடை செய்யப்பட்ட ஏனைய பல அமைப்புக்களும் நாட்டில் பல்வேறு வகையான செயற்திட்டங்களை முன்னெடுத்து வந்திருந்தன. இரத்த தானம் வழங்கல், வெள்ள நிவாரணப் பணி, கொவிட் நிவாரணப் பணி என பலவற்றினை இதற்கு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

இரத்த தான நிகழ்வுகளை தொடர்ச்சியாக நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்தமைக்காக ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத் சுகாதார அமைச்சிடமிருந்து பல தடவைகள் விருதுகள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் இணைந்து 1980.05.03ஆம் திகதி இந்த அமைப்பை உருவாக்கினர். பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை கல்வி மற்றும் ஆன்மிக ரீதியாக கட்டியெழுப்பும் நோக்கிலேயே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. சுமார் 41 வருட கால வரலாற்றினைக் கொண்ட இந்த அமைப்பின் தலைவர்களாக இதுவரை சுமார் 23 பேரும் பொதுச் செயலாளர்களாக சுமார் 30 பேரும் மாறி மாறிச் செயற்பட்டுள்ளனர். இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் கீழ் செயற்பட்ட இந்த அமைப்பு 2015ஆம் ஆண்டு காலப் பகுதியில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டது.

மாவனெல்லை சிலை உடைப்பு விவகாரத்துடன் தொடர்புபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள சாதீக் அப்துல்லாஹ் இப்றாஹீம் மற்றும் சாஹீத் இப்றாஹீம் சகோதரர்கள் இந்த அமைப்பின் முறையே செயற்குழு உறுப்பினர் மற்றும் சப்ரகமுவ பிராந்திய பொறுப்பாளர் ஆகிய பதவிகளில் செயற்பட்டுள்ளனர். எனினும்,குறித்த அமைப்பின் யாப்பிற்கு முரணாக செயற்பட்டார்கள் என்ற காரணத்தினால் கடந்த 2015.16ஆம் ஆண்டு காலப் பகுதியில் குறித்த இரு சகோதரர்களும் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

**ஈஸ்டர் தற்கொலை தாக்குதல்**

இவ்வாறான நிலையில் கடந்த 2019ஆம் ஆண்டு முஸ்லிம் பெயர் தாங்கிய குழுவொன்றினால் முன்னெடுக்கப்பட்ட ஈஸ்டர் தற்கொலைத் தாக்குதல் காரணமாக 269 அப்பாவி மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் சுமார் 500 பேர் வரை காய முற்றனர். இதனையடுத்து முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்த 435 முஸ்லிம் அமைப்புக்களின் பதிவுகளும் கடந்த 2019.09.23ஆம் திகதி இரத்துச் செய்யப்பட்டு வக்பு சபையின் கீழுள்ள முஸ்லிம் தர்ம நிதியத்தின் கீழ் பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய மேற்படி பட்டியலில் உள்ள முதல் நான்கு அமைப்புக்களின் பதிவுகளும் இரத்துச் செய்யப்பட்டன.

**ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை**

இவ்வாறான நிலையில் ஈஸ்டர் தற்கொலை தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் 31ஆவது அத்தியாயமான பரிந்துரைகளில் "தடை" என்ற தலைப்பில் மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன:

1. இலங்கையில் ஐ.எஸ் உள்ளிட்ட மத அடிப்படைவாத அமைப்புக்களை தடை செய்வதற்கான சட்டங்கள் அல்லது விதிமுறைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

2. இலங்கை ஜமாத்தே இஸ்லாமி மற்றும் அதன் மாணவர் அமைப்பான ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் ஆகியன தடை செய்யப்பட வேண்டும். பொருத்தமான சட்டப் பிரிவுகளின் கீழ் குற்றவியல் குற்றச்சாட்டுக்களை தாக்கல் செய்யும் பொருட்டு இந்த அமைப்பின் செயற்பாடுகள் மற்றும் அதன் அங்கத்தவர்கள் தொடர்பில் ஆழமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட வேண்டும்

3. பொதுபலசேனா அமைப்பு தடை செய்யப்பட வேண்டும்

இதற்கு மேலதிகமாக ஆணைக்குவின் பரிந்துரையில் "வஹாபிசம்" எனும் தலைப்பில் நாட்டில் வஹாபிச கொள்கை தடை செய்யப்பட வேண்டும் எனவும் வஹாபிச அமைப்புக்களான அனைத்து தௌஹீத் அமைப்புக்களும் தடை செய்யப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அவற்றின் பெயர் விபரங்கள் எவையும் அதில் குறிப்பிடப்படவில்லை.

13ஆம் பக்கம் பார்க்க...
நிப்தி அலி



# பிராந்திய செய்திகள்



## 3,000 மெட்ரிக் தொன் உணவு நன்கொடை

இலங்கையில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு உணவு அளிப்பதற்காக 3.000 மெட்ரிக் தொன் உணவினை நன்கொடையாக அமெரிக்கா வழங்கியுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்கினை வழங்குவதற்காக அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் ஊடாக இந்த நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.





## மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி விழுந்து கர்ப்பிணிப் பெண் மரணம்

யாழ்ப்பாணம் -காரை நகர் பொன்னாலை பாலத்தில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.



யாழ்ப்பாணம் காரைநகரில் இருந்து மூளாய் வைத்தியசாலைக்கு மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணித்த பெண் ஒருவர் திடீரென மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து தரையில் தலை அடிபட்டு உயிரிழந்துள்ளார்.

காரைநகர் சிவகாமி அம்மன் கோயில் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். விபத்து தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## நல்லூர் ஆலய சூழலில் விற்பனையில் ஈடுபட்ட சிலருக்கு விளக்கமறியல்

நல்லூர் ஆலய சூழல் உட்பட யாழ்ப்பாண நகர் பகுதிகளில் ஊதுபத்தி விற்பனையில் ஈடுபட்ட 3 பெண்கள். ஆண் ஒருவர் மற்றும் அவர்களை வேலைக்கு அமர்த்திய விடுதி உரிமையாளர் ஆகிய ஐவரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை இவர்களிடம் இருந்து கைக்குழந்தை ஒன்றும் ஆறு சிறுவர்களும் மீட்கப்பட்டுள்ளனர். அதில் கைக்குழந்தையை தாயுடன் இருக்க அனுமதித்த நீதவான் ஏனைய 6 சிறுவர்களையும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

நல்லூர் ஆலய சூழல் மற்றும் யாழ்ப்பாண நகர் பகுதிகளில் கைக்குழந்தைகளுடன் பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஊதுபத்தி விற்பனையில் ஈடுபட்டு வந்தனர்.

அதில் நல்லூர் பகுதியில் ஆலயத்திற்கு வருவோருக்கு ஊதுபத்தி விற்பனை என இடையூறு விளைவிக்கும் முகமாக சிலர் நடந்து கொண்டனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில். பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் இவர்கள் வெளிமாவட்டங்களில் இருந்து குழுக்களாக வரவழைக்கப்பட்டு யாழ்ப்பாணம் ஐந்து சந்திப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்க வைக்கப்பட்டு. ஊதுபத்தி விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர் என தெரியவந்துள்ளது.

அந்நிலையில் புதன்கிழமை இரவு யாழ்ப்பாண பொலிஸார் குறித்த விடுதியை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர். அதன் போது ஊதுபத்தி விற்பனைக்கு என அழைத்து வரப்பட்ட 3 பெண்கள். கைக்குழந்தை ஒன்று. 6 சிறுவர்கள். ஆண் ஒருவர் மற்றும் இவர்களை வேலைக்கு அமர்த்திய விடுதி உரிமையாளர் ஆகியோரை பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்றனர்.

பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் அவர்களை முற்படுத்தினர். அதனை அடுத்து நீதவான். விடுதி உரிமையாளர். ஆண் ஒருவர் மற்றும் 3 பெண்கள் ஆகியோரை எதிர்வரும் 9 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்டதுடன். கைக்குழந்தையையும் தாயுடன் இருக்க அனுமதித்தார்.

அதேவேளை 6 சிறுவர்களையும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களிடம் ஒப்படைக்க நீதிமன்றில் முற்படுத்தப்படும் வரையில் சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் கண்காணிப்பில் வைத்திருக்க நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு - எரிபொருள் நிலையங்கள் நெருக்கடியில்

மீண்டும் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் முண்டியடிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை சாய்ந்தமருது மருதமுனை உள்ளிட்ட பகுதிகளில் அன்று (25) இரவு முதல் பெற்றோல் எரிபொருளை மக்கள் பெறுவதற்கு எரிபொருள் நிலையங்களுக்கு வருகை தந்ததை காண முடிந்தது.

கடந்த காலங்களில் QR முறைமையினால் சீராக மேற்கொள்ளப்பட்ட எரிபொருள் விநியோகம் திடீரென இவ்வாறு நெருக்கடிக்குள்ளானமை மக்கள் மத்தியில் சிறு பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் மக்கள் கடந்த காலங்களில் எரிபொருள் நிலையத்தை சூழ ஒன்று கூடியவாறு நிற்பதையும் அதிகளவான வாகனங்கள் எரிபொருள் நிலையங்களை நாடி செல்வதையும் காண முடிகின்றது.

மேலும் நாடளாவிய ரீதியில் மீண்டும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளி வந்த வண்ணம் உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.



## கொரோனாவை விட மிகத் தீவிரமாக பரவும் டெங்கு!

கொழும்பு. கம்பஹா. களுத்துறை. காலி. கண்டி. கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் ஆம் திகதி முதல் 3 ஆம் திகதி வரை விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்தியர் நிமல்கா பன்னில ஹெட்டி தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அன்று (25) காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவித்த வைத்தியர் நிமல்கா பன்னில ஹெட்டி. குறித்த பிரதேசங்களில் டெங்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கடந்த மாதம் 11 ஆயிரத்து 500 பேர் டெங்கினால் பாதிக்கப்பட்டிருந்ததுடன் .ஒகஸ்ட் மாதத்தில் 5 ஆயிரத்து 600 ஆக குறைவடைந்துள்ளது.

இருப்பினும் எதிர்வரும் காலங்களில் பருவமழையினால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படலாம் எனவும் வைத்தியர் நிமல்கா பன்னில ஹெட்டி தெரிவித்தார்.

மேலும் கூறுகையில் .டெங்கு தடுப்பு வேலைத்திட்டங்களின் போது பொலிசார் மற்றும் இராணுவத்தினரின் ஆதரவைப் பெற்றாலும் டெங்கு பரவும் இடங்களை சுத்தம் செய்வதும். அந்தந்த குடியிருப்புகளுக்கு அருகாமையில் தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளை கண்காணிப்பதும் பொது மக்களின் பொறுப்பாகும். அதிக பங்காற்றுவதன் மூலமே டெங்கு நுளம்புகள் பரவுவதைக் குறைக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

தனியார் மற்றும் அரச அலுவலக கட்டிடங்கள். வழிபாட்டுத் தலங்கள் மற்றும் கட்டுமானத் தளங்களுக்கு அருகாமையில் அதிகளவில் நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அவதானித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆண்டு முழுவதும் 36 ஆயிரம் டெங்கு தொற்றாளர்கள் மட்டுமே பதிவாகியிருந்தனர். இருப்பினும் 2022 ஆண்டு ஆரம்பத்தில் இருந்து இன்று வரையில் 52 ஆயிரத்து 500 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் எனவும் கூறினார்.

அத்துடன் அதிகாரிகள் தொடர்ந்து பொதுமக்களுக்கு டெங்கு தொற்று தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் நுளம்புகள் பெருகும் இடங்களை சுத்தம் சுத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் பொது மக்களின் ஆதரவின்றி அடுத்த நான்கு மாதங்களில் இந்த எண்ணிக்கையை குறைக்க முடியாது என்றும் வைத்தியர் நிமல்கா பன்னில ஹெட்டி மேலும் தெரிவித்தார்.



# சினிமா துளிகள்



## மீண்டும் பூஜையுடன் தொடங்கிய “இந்தியன்-2” படப்பிடிப்பு




இயக்குனர் ஷங்கர் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிப்பில் உருவாகவுள்ள படம் “இந்தியன்-2”. “இந்தியன்-2” படத்தின் படப்பிடிப்பு மீண்டும் பூஜையுடன் தொடங்கியுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. கமல்ஹாசன் நடிப்பில் “இந்தியன்-2” படம் இயக்கப் போவதாக சங்கர் அறிவித்து. அதன்பின் படப்பிடிப்பு பணிகளும் தொடங்கியது. பின்னர் பல்வேறு காரணங்களால் படப்பிடிப்பு பணிகள் நிறுத்தப்பட்டன. அதன்பின் சங்கரும். கமல்ஹாசனும் வெவ்வேறு படங்களில் தங்களின் கவனத்தை செலுத்தினர். இந்தியன்-2 “விக்ரம்” பட வெற்றிக்குப் பிறகு. ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற கமல்ஹாசன். இந்தியன்-2 நிச்சயம் தொடங்கும்” என தெரிவித்திருந்தார்.

இந்த படத்துக்கு கதாநாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்ட காஜல் அகர்வால் விலகி விட்டதாக கூறப்பட்டது. இதனை காஜல் அகர்வால் மறுத்து. படப்பிடிப்பு செப்டம்பர் மாதம் தொடங்க உள்ளது என்றும் தெரிவித்தார். இந்நிலையில் “இந்தியன்-2” படப்பிடிப்பு மீண்டும் பூஜையுடன் இன்று தொடங்கியுள்ளதாக படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. இதனுடன் பூஜையில் எடுக்கப்பட்ட புகைப்படத்தையும் பகிர்ந்துள்ளனர். இந்த புகைப்படங்கள் தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.






## அரசியலில் களமிறங்குவது குறித்து திரிஷா விளக்கம்

தென்னிந்திய மொழிகளில் பல வெற்றிப் படங்களில் நடித்து பிரபலமடைந்தவர் திரிஷா.

திரிஷா விரைவில் அரசியலில் நுழையப் போகிறார் என்று தகவலுக்கு அவர் விளக்கமளித்துள்ளார். தெலுங்கில் “வர்ஷம்” படத்தின் மூலம் சினிமாவில் அறிமுகமானவர் நடிகை திரிஷா கிருஷ்ணன்.

தென்னிந்திய மொழிகளில் பல வெற்றிப் படங்களில் நடித்துள்ள இவர். 2002 ஆம் ஆண்டு வெளியான “மவுனம் பேசியதே” படத்தின் மூலம் தமிழில் கதாநாயகியாக அறிமுகமானார். தற்போது திரிஷா. மணிரத்னம் இயக்கத்தில் உருவாகி இருக்கும் “பொன்னியின் செல்வன்” திரைப்படத்தில் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார்.

திரிஷா சில தினங்களுக்கு முன்பு திரிஷா விரைவில் அரசியலில் நுழையப் போகிறார் என்று தகவல்கள் வெளியாகின. திரிஷா காங்கிரஸ் கட்சியில் இணைய உள்ளதாகவும் காங்கிரசின் மூத்த தலைவர்கள் திரிஷா வை தொடர்பு கொண்டு இதுகுறித்து பேசி வருவதாகவும் இணையதளங்களில் தகவல் வெளியானது. ஆனால். இது குறித்து திரிஷா தரப்பில் இருந்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியாகாமல் இருந்தது.

திரிஷா இந்நிலையில் திரிஷா அரசியலில் நுழைவது குறித்து விளக்கம் அளித்துள்ளார். தான் அரசியலில் நுழைய இருப்பதாக பரவும் தகவலில் துளியும் உண்மையில்லை. இந்த செய்தி எப்படி பரவியதென்று எனக்கே தெரியவில்லை. அரசியலில் சேரும் எண்ணம் தனக்கு இல்லை என்று கூறி தன்னைப்பற்றிய அரசியல் வதந்திக்கு திரிஷா முற்றுப்புள்ளி வைத்துள்ளார்.

## தனுஷின் திருச்சிற்றம்பலம் படத்தின் முழு பாக்ஸ் ஆபிஸ் என்ன தெரியுமா?

பழம் பழம் இந்த பெயரை கேட்டதும் தனுஷ் நம் கண்முன் வருவார். காரணம் திருச்சிற்றம்பலம் படத்தில் தனுஷை அப்படி தான் கலாய்ப்பார்கள். பள்ளி கல்லூரிகளில் நல்ல மதிப்பெண் பெற்றிருந்தாலும் ஆன்லைன் உணவு டெலிவரி பாயாக வேலை செய்கிறார் தனுஷ். இப்படம் வழக்கமான சென்டிமென்ட் கொண்டு தயாராகியுள்ள திரைப்படம் தான். ஆனால் ஓராண்டிற்கு பிறகு தனுஷை திரையில் காண்பதால் ரசிகர்களின் மகிழ்ச்சிக்கு ஒரு அளவே இல்லை.

பட பாக்ஸ் ஆபிஸ்

திரையரங்கில் நல்ல பாக்ஸ் ஆபிஸ் வேட்டை நடத்திவரும் இப்படம் உலகம் முழுவதும் இதுவரை ரூ. 65 கோடி வரை வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது. வரும் நாட்களிலும் படம் நல்ல வசூல் வேட்டை செய்யும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.



## 17 வயதில் கதாநாயகியாக அறிமுகமாகும் அனிகா

நடிகர் அஜித் நடிப்பில் இயக்குநர் கௌதம் மேனன் இயக்கத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் என்னை அறிந்தால். அப்படத்தில் நடிகர் அஜித்திற்கு மகளாக நடித்து ரசிகர்கள் மத்தியில் பிரபலமானவர் அனிகா சுரேந்திரேன்.

இவர் மலையாள திரைப்படங்களில் அதிகமாக நடித்திருக்கிறார். மேலும் தமிழில் கடைசியாக விஜய் சேதுபதியின் மாமனிதன் திரைப்படத்தில் நடித்திருந்தார்.

கதாநாயகி

இந்நிலையில் தற்போது அனிகா கதாநாயகியாக Oh my darling என்ற திரைப்படத்தில் நடிக்கவுள்ளாராம். அப்படம் மலையாளத்தில் உருவாக இருக்கிறது என சொல்லப்படுகிறது. மேலும் 12 வகுப்பு முடித்துவிட்டு கல்லூரியை தொடராமல் அவர் கதாநாயகியாக நடிக்க முடிவெடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



## தனுஷின் மகன் யாத்ரா கேப்டன்




நடிகர் தனுஷின் மகன் யாத்ரா படிக்கும் பள்ளியில் விளையாட்டு துறையின் கேப்டனாக அண்மையில் தேர்வானார். அந்த சந்தோஷ விஷயத்தை அவரது பெற்றோர்கள் தனுஷ் மற்றும் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இருவரும் நேரில் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

அந்த புகைப்படங்கள் வெளியாக ரசிகர்களும் வாழ்த்து கூறி வந்தார்கள். இந்த நிலையில் அதே பள்ளியில் பயிலும் இன்னொரு பிரபலத்தின் பேத்தி குறித்து ஒரு சூப்பர் தகவல் வந்துள்ளது.

எஸ்.வி. சேகர் பதிவு

தனுஷின் மகன் யாத்ரா சீனிர் விளையாட்டு அணிக்கு கேப்டன் ஆகியுள்ள நிலையில் நடிகர் எஸ்வி சேகரின் பேத்தியும் நடிகர் அஸ்வின் சேகரின் மகளுமான அர்னா சேகர் ஜ/னியர் அணிக்கு கேப்டனாகி உள்ளார். இதனை எஸ்.வி சேகரே தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இருந்து ரெலோவை விலகச்சொல்ல சுமந்திரன் யார்? – ஜனா எம்.பி.காட்டம்

**கடந்தவார தொடர்ச்சி...**

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் வெளியேறுவதாக சொல்வதை விட தாங்கள் பேசி சில நேரங்களிலே அவர் மாத்திரம் அல்ல சில முகநூல்களை பார்த்தால் சமூக ஊடகங்களை பார்த்தால் ஏன் ஆயுத குழுக்கள் இருக்கின்ற இப்பொழுது 3கட்சிகள் தான் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் இருக்கின்றது. தமிழரசுக்கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம்,புளட் இந்த மூன்றும் தமிழீழ விடுதலை இயக்கமும் புளட்டும் கடந்த காலங்களிலே ஆயுத போராட்ட கட்சிகளாக இருந்து அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு பரிணாம வளர்ச்சி பெற்றவை.

ஆனால் இவைகள் இரண்டு பேரும் கூட்டமைப்பை விட்டு வெளியேற வேண்டும் என்கின்ற பாணியிலே கருத்து பரிமாற்றங்கள் செய்கின்றார்கள். இவர்கள் இரண்டு பேரும் வெளியேறினா தமிழரசுக்கட்சி தனியாக தானே இருக்க போகின்றது. அதற்கு தமிழரசுக்கட்சி நாங்கள் வெளியேறுவோம் என்று சொல்லாம் தானே தமழரசுக்கட்சி நாங்கள் இவர்களை விட்டு வெளியேறுவோம் தனித்து போட்டியிடுவோம் நாங்கள் தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாங்கள் எங்களுடைய வேலையை பார்ப்போம்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பை விட்டு இவர்கள் வெளியேறுங்கள் என்று சொல்ல யாருக்கும் அறுகதை இல்லை அவர்களுக்கு விருப்பமில்லையா தமிழ் தேசிய கூட்டமைப்புடன் இருக்க அவர்கள் வெளியேற வேண்டியது தான். மற்றவர்களை வெளியேற சொல்ல வேண்டிய அதிகாரம் யாருக்கும் இல்லை. எங்களுக்கும் இல்லை நாங்களும் புளட் வெளியேறினால் ரெலோ சந்தோசப்படுமென்றும், தமிழரசுக்கட்சி வெளியேறினா ரெலோ சந்தோசப்படுமென்றோ தமிழரசுக்கட்சியில் இருக்கின்ற சுமந்திரன் வெளியேறினால் தமிழரசுக்கட்சி சந்தோசப்படுமென்றோ நாங்கள் கூறவில்லை நாங்கள் கூறவேண்டிய தேவை இல்லை உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் நீங்கள் வெளியேற வேண்டியது தான். மற்றவர்களை வெளியேற சொல்ல வேண்டிய அதிகாரம் உங்கள் யாருக்கும் தரவில்லையே.

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு செல்கின்றவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எத்தனையாம் ஆண்டு வந்தவர்கள் த.தே.கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது 2001ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இயங்கு நிலையில் இருந்த காலக்கட்டத்திலே பிராபாகரன் மற்றும் ஏனைய தலைவர்கள் செல்வம் அடைக்கலநாதன் ,சுரேஷ் பிரமேச்சந்திர குமார், சம்பந்தன் ஐயா, ஆனந்த சங்கரி இப்படியானவர்கள் எல்லோரும் சேர்ந்து நான்கு அரசியல் கட்சியின் செயலாளர்கள் கையொப்பமிட்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் அனுசரனையுடன் உருவாக்கப்பட்டது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பு 2001 இலே ஈழப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்பு 2009ஆம் ஆண்டிற்கு பிறகு 2010ஆம் ஆண்டு த.தே.கூட்டமைப்புக்குள்ளே வந்து தங்களை ஒரு முக்கியமான ஆளாக நினைத்துக்கொண்டு இவர்களை வெளியேற சொல்வதற்கு இவர்களுக்கு என்ன அறுகதை இருக்கின்றது. உங்களுக்கு விருப்பம் இல்லையா நீங்கள் வெளியேறிப்போங்கள். இது தான் எங்களுடைய கருத்து.




**கேள்வி : பூகோள அரசியல் ரீதியாக சர்வதேச ஆயுதக்கப்பல் சீனாவினுடைய உளவு கப்பல் வந்திருக்கின்றது அதே நேரத்திலே இந்தியாவினுடைய கப்பல் வந்திருக்கின்றது, உளவு விமானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த ரீதியில் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் ஒரு அகாலபாதாளத்திற்குள் சென்று இருக்கின்ற இந்த காலக்கட்டத்திலே அதாவது வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கான தீர்வு எந்த அடிப்படையில் நகரப்போகின்றது.**

பதில் : இதைப்பார்க்கப்போனால் மாறி மாறி இந்த நாட்டிலே ஆட்சி செய்துக்கொண்டிருக்கின்ற ஆட்சியாளர்கள் ஒரு நன்றி கெட்டவர்களாகத் தான் என்னைப்பொறுத்த மட்டிலே பார்ப்பேன். சீனா இலங்கைக்கு உதவி செய்திருக்கின்றது கடன் வழங்கி இருக்கின்றது. இலங்கையின் பிரதேசங்களை அபகரிப்பதன் நோக்காக கொண்டு அந்த வேலைத்திட்டத்தை செய்திருக்கின்றது. தங்களது பட்டுப்பாதை திட்டமோ அல்லது இந்தியாவுக்கு பக்கத்தில் இருக்கும் இலங்கையில் தனது காலை ஊண்டி இந்தியாவுக்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்க வேண்டும் என்ற பார்வையிலே தான் இலங்கைக்கு கூடுதலான வட்களில் கடன்களை கொடுத்து கடன் பொறிக்குள் சீனா கொண்டுவந்திருக்கின்றது.

ஆனால் இந்தியாவை பொறுத்த மட்டிலே நாங்கள் பார்த்தோமானால் ஒரு அயல்நாட்டு என்ற ரீதியிலே கடந்த காலங்களில் அதாவது 71 லே இலங்கை ஸ்ரீமாவோ ஆட்சிகாலத்திலே ஜே.வி.பி புரட்சி வரும் வரைக்கும் ஒரு நண்பனாக ஒரு சகோதரனாக நினைத்துக்கொண்டு இலங்கையை இந்தியா பல வகையிலே உதவி செய்துக்கொண்டிருக்கின்றது. தற்பொழுது ஒரு வேபு விமானம் கொடுத்தது மாத்திரம் அல்ல இந்த பொருளாதார வீழ்ச்சி வரும் போது ,நிதிய கிரடிட்லைன் ஊடாக கடன் திட்டத்தின் ஊடாக 4பில்லியன் அமெரிக்க டொலர் வரையான எரிப்பொருள் உணவு பண்டங்கள் மருந்து பொருட்கள் இன்னும் தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா தான் செய்திருக்கின்றது. கடந்த பாராளுமன்ற சிம்மாசன உரையிலும் கூட ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருந்தார். இந்த கொருளாதார வீழ்ச்சி காலத்திலே இந்தியா எங்களை மூச்சு விட வைத்தது என்று மூச்சே இல்லாமல் இருந்த இலங்கைக்கு மூச்சு கொடுத்தது இந்தியா தான் என்ற ரீதியிலே அவர் பேசி இருந்தார். அதை மறந்து தான் இலங்கை அரச இயந்திரங்கள் செயற்படுகின்றது. ஆனால் எந்த அளவிற்கு சீனாவின் கால் ஊன்றப்படுகின்றதோ அதாவது இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக சீனாவின் இலங்கை வருகையும் சீனா காலுன்றுவதும் எந்த அளவிற்கு அதிகரித்து செல்கின்றதோ அதற்கு மாறாக ஏதாவது நடவடிக்கைகள் இந்தியாவால் இலங்கைக்கு ஏற்படுத்தப்படலாம் என்பது என்னுடைய ஊகம் அதை இலங்கை புரிந்து கொள்ள வேண்டும் ஏனென்றால் இன்று உக்ரைன்-ரஷ்யா போர் ஏன் நடைபெறுகின்றது என்பது அனைவரும் அறிந்த விடயம் உக்ரைன்லே நேட்டோ படைகள் ரஷ்யாவுக்கு எதிராக நிலைகொண்ட போத உக்ரைனை தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக ரஷ்யா இன்று ஆறு மாதங்களை கடந்து போரிட்டுக்கு கொண்டு இருக்கின்றது. இதே பதற்ற நிலை இன்று தாய்வானிலே நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்றது. அமெரிக்காவுக்கு தாய்வான் வந்து கூடுதலான உதவிகளை செய்கின்றது.

**கேள்வி : உங்களுடைய கருத்து படி இந்தியாவானது ஆயுத போராட்ட குழுக்களை மீண்டும் ஒரு யுத்தியை கொடுத்து இலங்கைக்கு எதிரான போரை கொண்டு வருவதற்கான சாத்திய கூறுகள் இருப்பதாக உங்களுடைய பேச்சில் இருந்து தெரிய வருகின்றது. அவ்வாறான நிலை ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றதா?**

பதில் : அந்த நிலைமை மீண்டும் வருமோ என்று நான் எதிர் பார்க்கவில்லை ஏனென்றால் நாங்கள் போராடிய காலக்கட்டங்களிலே இருந்த மனோ நிலைகள் தற்போதைய இளைஞர்களிடம் இல்லை மீண்டும் ஒரு ஆயத போராட்டம் இப்போதைக்கு வரகூடிய சாத்திய கூறு சூழ்நிலைகள் இல்லை எதிர்காலத்திலே தொடர்ச்சியாக தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டு தமிழ் மக்களுடைய திட்டங்கள் அபகரிக்கப்பட்டு நாங்கள் தொடர்ச்சியாக அடிமைப்படுத்தப்பட்டால் எதிர் காலத்திலே இந்த போராட்டங்கள் ஏற்படக்கூடிய சாத்திய கூறுகள் இருக்கின்றது. நான் கூறுவது ரஷ்யா - உக்ரைன் போர், சீனா - தாய்வான் மற்றும் இந்த மாதிரியான ஒரு சூழ்நிலை இங்கு வரக்கூடிய சாத்திக்கூறுகள் இருக்கின்றது.

கேள்வி : சட்லைட்,தொய்பா போன்ற அமைப்புக்களை இந்தியா தன் வசம் வைத்திருக்கின்றது. கடந்த காலத்தை நீங்கள் எடுத்துக்கொண்டால் கூட இந்தியாவினுடைய தேசிய பாதுகாப்பிற்காவே அதாவது இது தமிழீழ விடுதலைப்புலிகளாக இருக்கலாம். ரெலோவாக இருக்கலாம். புளட்டாக இருக்கலாம் அங்கு ஆயுத பயிற்சி கொடுத்து தங்கள்பொற்கோயில் பிரச்சனையாக இருக்கலாம். பல்வேறு விடயங்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளையும் ஏனைய இயக்கங்களையும் இந்திய அரசு தன் வசப்படுத்தியே இருந்தது.

பதில் : அப்படி என்று சொல்வதற்கு இல்லை இந்தியா வந்து கடந்த காலங்களில் விடுதலைப்போராட்ட இயக்கங்களுக்கு உதவி செய்து இருந்த காலங்கள் இருக்கின்றது. வெளிப்படையாகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளில் பேசியது மாத்திரம் அல்ல அப்போதைய எதிர் கட்சி தலைவர் அமிர்தலிங்கம் அண்ணன் அவர்களை இந்திரா காந்தி அழைத்து இலங்கை அதிபருக்கு கொடுக்காத மரியாதை கூட இந்தியா அரசினால் கொடுக்கப்பட்டது. இந்திய சுதந்திர தினத்திலே அனைத்து இயக்கங்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கப்பட்டது பயிற்சிகள் கொடுக்கப்பட்டது. ஆனால் அது முற்றுமுழுதாக எங்களில் உள்ள அக்கறை மாத்திரம் அல்லாமல் தன்னுடைய நாட்டு நலன்களையும் கருத்தில் கொண்டு தான் அவர்கள் அப்படி செய்திருந்தார்கள். எங்களுடைய முன்னாள் தலைவர் சபாரட்ணம் கூட 84ஆம் ஆண்டு ஜேர்மனிக்கு சென்றிருந்த நேரம் ஒரு பத்திரிகைக்கு பேட்டிகொடுத்திருந்தார். அந்த பத்திரிகைக்கு ஒரு முக்கியமான கருத்தை சொல்லி இருந்தார் அதாவது எங்களது விடுதலைப்போராட்டம் இந்தியாவின் பாதுகாப்புடன் பின்னிபிணைந்துள்ளது. இந்தியா வந்து தன்னுடைய நலன் தன்னுடைய பாதுகாப்பு கருத்தில் கொண்டு தான் எங்களது போராட்டத்திற்கு உதவி செய்ததாக அவர் கூறியிருந்தார். அதில் உண்மையும் இருக்கின்றது அந்த நேரத்திலே இந்தியாவின் பாதுகாப்பு எங்களுடைய போராட்டம் மாத்திரம் அல்ல நிரந்தர அரசியல் மாற்றத்திலும் தங்கி இருக்கின்றது.

**கேள்வி : ஆயுத போராட்டம் இடம்பெற்ற காலப்பகுதியில் சர்வதேச ரீதியாக எந்தவொரு ஆய்வு கப்பலோ புலனாய்வு கப்பலோ சர்வதேச கடற்பரப்பில் அதாவது இலங்கையினுடைய 650610சதுர கீலோ மீற்றர் பரப்பிலே தமிழீழ விடுதலைப்புலிகள் வந்து அதை 30ஆண்டு காலமாக அனுமதிக்க வில்லை ஜெட்லைனர் என்ற ஒரு கப்பல் மாத்திரமே கொழும்பில் இருந்து தாக்குதல் நடத்திக்கொண்டிருந்தது. ஏனைய எந்த கப்பல்களும் வடக்கு கிழக்கு கடற்பகுதிகளிலோ ஏனைய கடற்பகுதிகளிலோ வருவதற்கான அனுமதியை வழங்கவில்லை. ஆனால் தற்பொழுது இவ்வாறு ஆயுத கப்பல்கள் தன்னிச்சையாக வந்து செல்கின்ற இயல்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்ற நிலையிலே இந்தியா ஏன் அப்படியான திட்டத்தை மீண்டும் கையாள முடியாது என்று கூறுகின்றீர்கள்.**

பதில் : இந்தியாவினுடைய பகுப்பாய்வுகள் செய்ய வேண்டிய விடயம் இதுசம்மந்தமாக கருத்து கூற முடியாது. ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் இயங்கு நிலையில் இருந்த காலக்கட்டத்திலே அவர்கிடம் கடற்படை இருந்தது கடற்படை இப்படியான நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக இருந்தது. எந்த நோக்கத்திற்காக இந்த கடற்பரப்பிலே வேறு நாட்டு போர் கப்பல் வருவதற்கு பயப்பட்டார்கள். அதே தமிழீழ விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் அனால் இந்தியா தற்பொழுது அந்த நிலைமையை கையாள வேண்டும்.

11ஆம் பக்கம் பார்க்க...

**நேர்காணல் : இரணியன்**

10ஆம் பக்க தொடர்ச்சி...

என்பது அவர்களது நிலைப்பாடு அவர்களது அரசாங்கத்தின் கொள்ளை வகுப்பு சம்மந்தமாக நான் பேச முடியாது தானே.

**கேள்வி : அவ்வாறான நிலை போர் கப்பல் வந்து போவதற்கு ஆசிய பசுபிக் பிராந்தியத்திலே இலங்கையை ஒரு யுத்த பூமியாக பயன்படுத்துகின்ற ஒரு சதிதிட்டம் தானே.**

பதில் : அது வந்து இலங்கை அரசாங்கம் தற்பொழுது புரிந்து கொள்ள வேண்டும். தற்பொழுது மாத்திரம் அல்ல இந்த யுவான் வாங் 5 கப்பல் மாத்திரம் அல்ல 2016ஆம் ஆண்டு கூட சீனாவினுடைய நீர் முழ்கிப்கப்பல்கள் இரண்டு கொழும்பு துறைமுகத்திற்கு வந்து செயற்பட்ட வரலாறுகளும் இருக்கின்றது. அது வந்து தாங்கள் இலங்கையை அச்சுறுத்தி சீனா இங்கு வந்து செல்வது சில வேளைகளில் இந்தியாவுக்கு இலங்கை மீது வெறுப்பு வர வேண்டும். இந்தியாவினுடைய நட்பு இலங்கையுடன் இருக்க கூடாது தன்னுடன் மாத்திரம் தான் இருக்க வேண்டும். என்ற ஒரு இராஜதந்திர நகர்வாகவும் அது இருக்கலாம்.இலங்கைக்கு வந்து இரு தலை கோழியாக இரண்டு பக்கமும் அடிபடும் நிலை தான் இருக்கின்றது. ஏனென்றால் சீனாவின் கடன் பொறிக்குள்ளும் மாட்டிக்கொண்டு இருக்கின்றது அதே நேரத்திலே அயல் நாடான தெற்காசிய வல்லரசான இந்தியாவின் உதவிகள் பகைத்து கொள்ள முடியாத ஒரு நிலையில் இலங்கை இருக்கின்றது. ஆனால் இலங்கை இன்னுமொரு உக்ரைனாக மாறாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது தான் என்னுடைய நிலைப்பாடு

**கேள்வி: இந்த நாட்டினுடைய பொருளாதார பிரச்சனை இவ்வாறாக இருக்கின்ற பொழுது இந்த தமிழ் மக்களுடைய 30ஆண்டு கால போராட்டம் அல்லது தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் என்னவாகும்.**

பதில் : தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் சர்வ கட்சி அரசு ஒன்று உருவாகமாக விருந்தால் தீர்வு திட்டத்தை அவர்கள் கெடுத்து தான் ஆக வேண்டும். கடந்த கால வரலாறுகள் ஒர கட்சி தமிழர்களுக்கான தீர்வு விடயத்திலே சாதகமாக இருந்தால் மற்றைய கட்சி எதிர்பாக இருந்தால் நான் ஏற்கனவே கூறியதை போன்று பண்டா செல்வா ஒப்பந்தம் நடைபெறுமாகவிருந்தால் ஜே.ஆர்.ஜெயர்ததன புத்த பிக்களுடன் கண்டி யாத்திரை சென்றார். அதற்கு எதிராக டட்லி செல்வா ஒப்பந்தம் செய்யும் போது ஸ்ரீ மாவோ பண்டாரா நாயக்கக்கு எதிராக போர் கொடி தூக்கினர். சந்திரிக்கா ஆட்சி காலத்தில் தீர்வு பொறி வரும் பொழுது ரணில் விக்கிரமசிங்க அதற்கெதிராக எதிர்த்தார். ஆகவே இந்த வரலாறு எல்லாம் எங்களுக்கு தெரிந்த வரலாறு ஆனால் ஒரு சர்வ கட்சி ஆட்சி அமையுமாக இருந்தால் உண்மையான இந்த பொருளாதார வீழ்ச்சிக்கு இனப்பிரச்சனை தான் காரணம் என்பதை அவர்கள் உணர்ந்துக்கொள்வார்களாக இருந்தால். எந்த வித எதிர்ப்பும் அல்லாமல் தமிழ் மக்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வை கொடுக்க வேண்டிய ஒரு கட்டாயம் தென்னிலங்கைக்கு இருக்கின்றது. இல்லையென்றால் இந்த பொரளாதாரம் வீழ்ச்சி பொருளாதாரத்தில் இருந்து இலங்கை மீட்டெடுப்பதென்பது மிகவும் கடினமான விடயம்.

# நம்ப முடியாத சில சுவாரஸ்யமான உண்மைகள்!

**உங்களை வியக்க வைக்கும் பல சுவாரசியமான விஷயங்கள் உலகில் உள்ளன. அப்படிப்பட்ட நீங்கள் இதுவரையிலும் அறியாத சில சுவாரஸ்யமான உண்மை தகவல்களை இந்த பதிவில் படித்து தெரிந்து பயன்பெற்று கொள்ளுங்கள்!**

**1. கை,கால் விரல்களிலிருந்து சுடக்கு சத்தம் ஏன் கேட்கிறது என்று தெரியுமா?**
**இந்த சத்தம் உங்கள் எலும்பில் இருந்து வருவது கிடையாது. அந்தப் பகுதிகளில் இருக்கும் நைட்ரஜன் வாயு குமிழ்கள் (Nitrogen Gas Bubbles) வெடிப்பதனால் சுடக்கு சத்தம் நமக்கு கேட்கிறது.**

**2. தென் கொரியாவாவை சேர்ந்த Kim Ungyong என்பவர். தனது 3 வயதிலேயே கொரியன், ஜெர்மன், ஆங்கிலம் மற்றும் ஜப்பானியம் என 4 மொழிகளையும், கால்குலஸ் கணக்குகளையும் கற்றுக்கொண்டார். 4 வயதில் இயற்பியல் துறை விருந்தினர் மாணவராக ஹன்யாங் பல்கலைக்கழகம் இவரை அழைத்தது. 7 வயதில் அமெரிக்காவுக்கு நாசா இவரை அழைத்தது. இறுதியாக 15 வயதில் தனது Ph.D பட்டத்தை பெற்றார். கின்னஸ் புத்தகத்தில் அதிக IQ திறன் கொண்டவர்கள் பட்டியலில் இவர் இடம்பெற்றுள்ளார்.**

**3. உலகின் மிக உயரமான ரயில் பாலம் ஜம்மு-காஷ்மீரில் உள்ள செனாப் பாலம். செனாப் ஆறுக்கு மேலே 1178 அடி உயரத்தில் இந்தப் பாலம் அமைந்துள்ளது.**

**4. ஆஸ்கர் விருதைப் பெற்ற முதல் மனிதர் அல்லாத திரை கதாபாத்திரம் மிக்கி மவுஸ்.**

**5. பெண்களின் மூளையை விட ஆண்களின் மூளை 10 சதவீதம் பெரியது. ஆனால் ஆண்களின் மூளையை விட பெண்களின் மூளையின் செயல்திறன் அதிகம்.**

**6. Krista மற்றும் Tatiyana Hogan இருவரும் கனடா நாட்டை சேர்ந்த தலைகள் இணைந்த இரட்டையர்கள். இவர்களில் ஒருவர் கண்களால் பார்ப்பது, மனதில் நினைப்பது எல்லாம் இன்னொருவருக்கும் தெரியுமாம்..!**

**7. காதில் உள்ள ஸ்டாப்ஸ் (Stapes) என்ற எலும்பு தான் மனித உடலில் மிகவும் சிறிய எலும்பு ஆகும்.**

**8. துபாயில் உள்ள பாம் ஜுமேரா தீவு தான் உலகிலேயே மிகப்பெரிய மனிதனால் உருவாக்கப்பட்ட செயற்கை தீவு ஆகும். இந்தத் தீவு ஒரு பனை மரத்தின் வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது.**

**9. மனிதனால் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட உலோகம் செம்பு. மனிதர்கள் சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்பே செம்பை பயன்படுத்தி வருவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன.**

**10. உலகின் மிக நீளமான பெயரைக் கொண்ட ஊர் நியூசிலாந்து நாட்டில் உள்ளது. இந்த ஊரின் பெயர் Taumatawhakatangihangakoauauotamateaturipukakap ikimaungahoronukupokaiwhenuakitanatahu ஆகும். இந்தப் பெயரில் மொத்தம் 85 எழுத்துக்கள் உள்ளன!அடேங்கப்பா!**

**11. உலகில் உள்ள அனைத்து பாண்டா கரடிகளும் சீன நாட்டு அரசுக்கே சொந்தமானது! சீனாவை தவிர நீங்கள் மற்ற நாடுகளின் Zoo-களில் பார்க்கும் பாண்டா கரடிகள் அனைத்தும் சீன அரசிடம் இருந்து கடனாக வாங்கப்பட்டவை தான்!**

**12 தேனீக்கள் வாழ்நாள் முழுவதும் உழைத்தால் தான் நமக்கு ஒரு டீஸ்பூன் தேன் கிடைக்கும்.**

**13. அதில் உள்ள சன் டூங் (Son Doong) குகை தான் உலகிலேயே மிகவும் பெரிய குகை ஆகும். இந்த குகைக்குள்ளேயே தனி நதி, காடு, காலநிலை எல்லாமே உள்ளன. இந்த குகை சுமார் 3 மில்லியன் ஆண்டுகள் பழமையானது.**

**14. மனிதர்கள் இரவில் கண்ட கனவுகளில் 90 முதல் 95% கனவுகளை பகலில் கண் விழிக்கும்போது மறந்து விடுவார்கள்.**

**15. மனித உடலில் காது மற்றும் மூக்கு ஆகிய இரண்டு உறுப்புகளும் வாழ்நாள் முழுவதும் வளர்ந்து கொண்டேதான் இருக்கும்.**

**16. ஒரு நீலத் திமிங்கலத்தின் எடை என்பது 30 யானைகளின் எடைக்கு ஈடானது. ஒரு யானையின் எடை என்பது நீலத் திமிங்கலத்தின் நாக்கின் எடைக்கு மட்டுமே ஈடானது!**

**17. உலகில் தற்போது வாழும் மிக உயரமான மனிதர் துருக்கி நாட்டைச் சேர்ந்த சுல்தான் கோசென். புதிய விவசாய தொழில் செய்து வருகிறார். தற்போது 38 வயதான இவரது உயரம் 2.52 மீட்டர் ஆகும்!**

**18. இந்தியாவின் முதல் உணவு தானிய ஏடிஎம் இயந்திரம் ஹரியானா மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்திற்கு அன்னபூர்த்தி என பெயரிடப்பட்டுள்ளது.**

**19. உங்கள் மூளை சுமார் 12 - 25 watts மின்சாரத்தை உருவாக்குகிறது. குறைந்த வாட்டேஜ் கொண்ட LED Bulb ஐ இயக்க இதுவே போதுமானது!**


**20. நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுவதும் இரண்டு நீச்சல் குளங்களை நிரப்பும் அளவிற்கு உமிழ்நீரை உங்கள் வாயில் உற்பத்தி செய்கிறீர்கள்.**







# பல்சுவை கதம்பம்



## பருக்களை உடனடியாக போக்க உதவும் சில வழிகள்!

முகத்தில் சீழ் நிறைந்த பருக்கள் வருவதற்கு பல காரணங்கள் உள்ளன. அதில் சருமத்தில் அதிகளவு எண்ணெய் சுரப்பு, அதிகமான மேக்கப், தூசிகள் மற்றும் அழுக்குகளால் சருமத் துளைகள் அடைப்பது, மரபணு காரணங்கள், சருமத்தில் இறந்த செல்களின் தேக்கம் அதிகரித்தல், ஹார்மோன் மாற்றங்கள், அதிகமாக வெயிலில் சுற்றுவது போன்றவை குறிப்பிடத்தக்கவை.

ரோஸ் வாட்டர் சந்தனப் பவுடரை சேர்த்து பேஸ்ட் செய்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் கழுவ வேண்டும். இதனால் சருமத்தில் உள்ள அழுக்குகள் மற்றும் அதிகப்படியான எண்ணெய் பசை நீங்கி, பருக்களும் மறைந்துவிடும்.

தினமும் சீழ் நிறைந்த பருக்களின் மீது சிறிது தேனைத் தடவி மசாஜ் செய்து, 1 மணிநேரம் கழித்து குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். இதனால் சருமத்துளைகளில் உள்ள அடைப்புக்கள் நீங்கி, சருமத்துளைகள் சுத்தமாகும்.

கற்றாழை ஜெல்லை தினமும் இரவில் படுக்கும் முன் முகத்தில் தடவி மசாஜ் செய்து, மறுநாள் காலையில் கழுவ வேண்டும். இப்படி ஒரு மாதம் தொடர்ந்து பின்பற்றினால், முகம் பருக்களின்றி பிரகாசமாக இருப்பதைக் காணலாம்.

விளக்கெண்ணெயை சிறிது வெதுவெதுப்பாக சூடேற்றி, முகத்தில் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். ஒருவேளை விளக்கெண்ணெய் சற்று அடர்த்தியாக இருப்பது போல் இருந்தால், ஆலிவ் ஆயிலுடன் சேர்த்து கலந்து பயன்படுத்துங்கள்.

உருளைக்கிழங்கை வட்ட துண்டுகளாக்கி, ஃப்ரிட்ஜில் சிறிது நேரம் வைத்து, பின் அதை எடுத்து முகத்தை மசாஜ் செய்து, சிறிது நேரம் கழித்துக் கழுவ வேண்டும். இல்லாவிட்டால், உருளைக்கிழங்கு சாற்றினை முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் கழுவ வேண்டும். இப்படி செய்வதன் மூலமும் பருக்கள் நீங்கி, முகம் அழகாக இருக்கும்.

வெந்தயக் கீரையை சிறிது எடுத்து அரைத்து, அத்துடன் தயிரை சிறிது சேர்த்து கலந்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும்.



## முடி உதிர்வை கட்டுப்படுத்தும் கற்றாழை எண்ணெய்!!

கற்றாழை தலைமுடிக்கு அற்புதமான நன்மைகளைத் தருகிறது. கற்றாழையில் கூந்தலுக்கு தேவையான 100 விதமான சத்துக்கள் உள்ளன.

கற்றாழை ஜெல்லில் உள்ள புரோட்டியோலைடிக் என்சைம் தலையில் உள்ள இறந்த செல்களை நீக்கி மயிர்கால்களுக்கு போஷாக்கு கொடுத்து கூந்தல் வளர்ச்சியைத் தூண்டுகிறது.

கற்றாழை ஜெல் உங்கள் கூந்தலை மென்மையாக பட்டு போன்று மாற்றும். மேலும் இது முடி உதிர்வை கட்டுப்படுத்துவதோடு அழகான அடர்த்தியாக வளர பயன்படுகிறது.

தேவையான பொருட்கள்:

1 கற்றாழை தண்டு சிறிது, தேங்காய் எண்ணெய்.

செய்முறை: தண்டை இரண்டு பகுதிகளாக வெட்டி, கற்றாழை ஜெல்லை ஒரு சிறிய கிண்ணத்தில் எடுத்து கொள்ளவும். இந்த கற்றாழை ஜெல்லின் அரை கப் தேங்காய் எண்ணெய்யுடன் கலக்கவும். கற்றாழை தேங்காய் எண்ணெயின் விகிதம் 1:1 ஆக இருக்க வேண்டும்.

இந்த கலவையை மிதமான சூட்டில் சுமார் 5 முதல் 7 நிமிடங்கள் வரை சூடாக்கவும். அடுப்பை அணைத்து விட்டு குளிர்விக்கவும். கலவையை ஒரு இருண்ட பாட்டில் ஊற்றி, பயன்படுத்துவதற்கு முன்பு சுமார் 2 வாரங்களுக்கு குளிர்ந்த இடத்தில் சேமிக்கவும்.

நன்மைகள்: இந்த வீட்டில் செய்த கற்றாழை தேங்காய் எண்ணெய் பொடுகு மற்றும் முடி உதிர்வுக்கு இது ஒரு சிறந்த எண்ணெய். இது முடி வளர்ச்சியை அதிகரிக்கிறது, பலவீனமான முடியை பலப்படுத்துகிறது. இது முடியை வலுவூட்டி, தலை முடி மற்றும் ஸ்கேல்ப் pH அளவை சமநிலையில் வைத்திருக்கும்.



## கண் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை தீர்க்கும் கரட் !!



கரட்டில் விட்டமின் 'A' உயிர்ச்சத்தை உண்டு பண்ணக்கூடிய கார்டீன் என்ற ஒரு வகையான மஞ்சள் பொருள் நிறைய இருக்கிறது. இது தொற்று நோய்க் கிருமிகளை அழிக்கும் சக்தி பெற்றதாக இருக்கிறது. கரட்டைச் சாப்பிட்டு வந்தால் உடல் பலம் பெறும். இரத்த விருத்தி உண்டாகும்.

வைட்டமின் ஏ சத்து குறைபாட்டினால் உண்டாகும் மாலைக்கண் நோயை குணமாகும் கரட். கண் பார்வை பிரச்சனை உள்ளவர்கள் கரட்டை அடிக்கடி சாப்பிட வேண்டும். இதனால் கண் பார்வை அதிகரிக்கும்.

கண் சம்பத்தப்பட்ட பிரச்சனைகளை சரிசெய்து கண்ணுக்கு நல்ல கூர்மையான பார்வை அளிக்கிறது. மரபணு பாதிப்புகள், புற்றுநோய் போன்ற பிரச்சனைகளை தவிர்த்து ஆன்டி-ஆக்சிடண்டாக செயல்படுகிறது.

இதய நரம்புகளில் படியும் கொழுப்புகளை தவிர்த்து, இதயத்துக்கு பலத்தை கொடுக்கிறது. ரத்தத்தில் உள்ள கொழுப்புகளை குறைத்து, நல்ல ரத்த ஓட்டத்தை தருகிறது. தினமும் கரட்டை சாப்பிட்டு வந்தால் இன்சுலின் அதிகமாக சுரக்கும். சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல் ஏற்படுகிறவர்கள் தினமும் கரட் சாப்பிட வேண்டும்.

உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை நீக்கி உடலை ஆரோக்கியமாகவும் வைக்கிறது. உடல் எடையை குறைத்து மெலிவான தோற்றத்தை தருகிறது. கரட்டுடன் தேன் சேர்த்து கலந்து சாப்பிட்டு வந்தால் கர்ப்பிணி பெண்களுக்கு நல்லது.

சர்க்கரை நோய் உள்ளவர்கள், கரட்டை சாப்பிட்டு வந்தால் சர்க்கரை அளவு கட்டுப்பாட்டில் இருக்கும். கரட்டை எலுமிச்சை சாற்றுடன் பாலில் சேர்த்து சாப்பிட்டால் உடலுக்கு ஆரோக்கியம் கிடைக்கும்.

## நண்டு கறி செய்முறை

**தேவையானவை :**

**நண்டு – ஒரு கிலோ**
**புளி – எலுமிச்சை அளவு**
**பச்சை மிளகாய் – 4**
**தனியா பவுடர் – 3 தேக்கரண்டி**
**மஞ்சள் தூள் – கால் தேக்கரண்டி**
**எண்ணெய் – அரை கப்**
**பூண்டு – 2**
**இஞ்சி – ஒரு அங்குலத் துண்டு**
**மிளகாய் வற்றல் – 3**
**வெந்தயம் – ஒரு தேக்கரண்டி**
**உப்பு – தேவையான அளவு**
**கடுகு – ஒரு தேக்கரண்டி**

**செய்முறை :**
முதலில் நண்டை ஆய்ந்து கழுவி சுத்தம் செய்து நீரை வடித்துக் கொள்ளவும்.

பின்பு ஒரு பாத்திரத்தில் புளியை போட்டு கால் கப் தண்ணீர் ஊற்றி கரைத்து வடிகட்டிக் கொள்ளவும். பச்சை மிளகாய், பூண்டு, இஞ்சி இவற்றை நறுக்கிக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் கடுகு தாளித்து பிறகு வெந்தயத்தை போட்டு சிவக்க விடவும்.

சிவந்ததும் மிளகாய் தூள், மஞ்சள் தூள், தனியா தூள் சேர்த்து சிறிதளவு தண்ணீர் ஊற்றிக் கொதிக்க விடவும். கொதித்ததும் தக்காளி, பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு, கறிவேப்பிலை சேர்த்து மறுபடியும் ஐந்து நிமிடம் கொதிக்க விடவும். பிறகு அதில் கரைத்த புளித் தண்ணீரை ஊற்றி கொதிக்க விடவும்.கொதி வந்ததும் சுத்தம் செய்த நண்டு



சேர்த்து உப்பு போட்டு தீயை மிதமாக வைத்து 20 நிமிடம் மூடிப் போட்டு வேக வைக்கவும்.கலவை கெட்டியாக வந்ததும் அடுப்பி லிருந்து இறக்கவும்.

07ஆம் பக்க தொடர்ச்சி...

### இஸ்லாமிய அமைப்புக்களின் தடை

நாட்டின் சமாதானத்தை உறுதிப்படுத்தும் வகையில் தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு மற்றும் சட்டவாட்சியின் நலனில் அரசாங்கத்தின் முயற்சிகளை முன்னெடுப்பதற்காக அடிப்படைவாதத்துடன் தொடர்புடையன என்ற காரணத்தை முன்வைத்தே இந்த அமைப்புக்கள் தடை செய்யப்பட்டுள்ளன.

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 27ஆம் பிரிவின் கீழ் 2021ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க ஒழுங்கு விதிகளுக்கமைய குறிப்பிட்ட அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த தடையினை அடுத்து குறித்த அமைப்புக்களினால் பராமரிக்கப்பட்டு வந்த பல வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. இதில், JASM இன் சுமார் 80 இலட்சம் ரூபா பணம் வைப்பிலிடப்பட்டிருந்த வங்கிக் கணக்கொன்றும் முடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் தடைசெய்யப்பட்ட அமைப்புக்கள் சிலவற்றின் கீழ் காணப்பட்ட அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் விடயத்தில் அரசாங்கத்தினால் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எவ்வாறாயினும் தடை செய்யப்பட்ட அனைத்து அமைப்புக்களின் அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன. அத்துடன் 2015ஆம் ஆண்டு காலப் பகுதியில் வக்பு சபையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட காத்தான்குடி ஜாமிஉல் அதர் பள்ளிவாசல் மீது விதிக்கப்பட்ட தடையினை அடுத்து அப்பள்ளிவாசல் முற்றாக மூடப்பட்டுள்ளது.

இதேவேளை,தடை செய்யப்பட்ட அமைப்புக்களின் உறுப்பினர்கள் யாராவது பள்ளிவாசல்களின் நிர்வாகிகளாக செயற்பட்டால் உடனடியாக குறித்த பதவியிலிருந்து இராஜினாமாச் செய்யுமாறு வக்பு சபை ஏற்கனவே அறிவித்திருந்தது. இதனையடுத்து சுமார் 12 பேர் பள்ளிவாசல் நிர்வாக சபை உறுப்பினர் பதவிகளில் இருந்து இதுவரை இராஜினாமாச் செய்துள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

### அடிப்படை மனித உரிமை மீறல் மனு

இதேவேளை, குறித்த தடையினை எதிர்த்து துயுளுஆஇ அகில இலங்கை தௌஹீத் ஜமாஅத்இ ஐக்கிய தௌஹீத் ஜமாஅத், ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத்,சிலோன் தௌஹீத் ஜமாஅத், ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம் ஆகியன உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக் களை தாக்கல் செய்துள்ளன. இதில், ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கத்தினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு கடந்த செவ்வாய்க்கிழமை உயர் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு எதிர்வரும் செப்டம்பர் 16ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அதேவேளை, JASM இனால் தாக்கல் செய்யப்பட்ட மனு அன்று (05) வியாழக்கிழமை உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள் ளப்படவுள்ளது. எவ்வாறாயினும் ""முஸ்லிம் அமைப்புக்கள் மீதான தடை தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் சட்டவிரோதமானதாகும்"" என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம்.சுஹைர் தெரிவித்தார்.

### சட்டத்தரணி எம்.எம்.சுஹைர்




"இந்த தடையின் ஊடாக முஸ்லிம் சமூகத்திலுள்ள சிவில் இயக்கங்களை முடக்குவதற்கான மறைமுக திட்டமொன்று காணப்படுகின்றது. இதன் பின்னணியில் பல வெளிநாட்டு சக்திகள் செயற்படுகின்றன" எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்த தடை நீக்கப்படாவிட்டால் மேற்படி அமைப்புக்களில் அங்கத்தவர்களாக இருந்தவர்கள் மாத்திரமல்லாது அவர்களது குடும்பத்தினரும் கூட எதிர்காலத்தில் வெளிநாடுகளுக்கு பயணிப்பதற்கான விசாக்களை பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டி வரலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

### தொழில் இழப்பு

இந்த அமைப்புக்களின் தடை காரணமாக சுமார் 100க்கு மேற்பட்டோர் இன்று தொழில்களை இழந்துள்ளனர். இவர்கள் குறித்த அமைப்புக்களின் அலுவலக ஊழியர்கள், ஆசிரியர்கள், மார்க்கப் பிரச்சார பணிகளில் ஈடுபட்டவர்களாவார்.

### அந்நியச் செலாவணி

அது மாத்திரமல்லாமல், குவைத் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஸகாத் ஹவுஸ், பஸாயிர் செரிட்டி மற்றும் இந்தியன் கொண்டினன் கொமிட்டி ஆகிய மூன்று அமைப்புக்களின் நிதியுதவியின் ஊடாகவே கடந்த பல தசாப்த காலமாக அநாதை பராமரிப்புக்கான நிதியுதவித் திட் டத்தை JASM அமைப்பு முன்னெடுத்து வந்தது. இதற்காக இறுதி மூன்று வருடங்களில் 3.1 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு நாட்டின் அந்நியச் செலாவணிக்கு பாரிய பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது என துயுளுஆ அமைப்பு சார்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, தடை செய்யப்பட்ட இந்த அமைப்புக்களில் சிலோன் தௌஹீத் ஜமாஅத்தின் பொதுச் செயலாளர் அப்துர் ராசீக் தவிர வேறு எவருக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் தமது பக்க நியாயங்களைச் சொல்வதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த நிலையில், அனைத்து தௌஹீத் அமைப்புக்களையும் தடை செய்யுமாறு சிபாரிசு செய்யப்பட்டமை தொடர்பில் இந்த ஆணைக்குழுவின் உறுப்பினராக செயற்பட்ட நீதி அமைச்சின் முன்னாள் செயலாளர் (ஓய்வு) திருமதி டப்ளியூ.எம்.எம்.ஆர். அதிகாரியினை நாம் தொடர்புகொண்ட போது, இது தொடர்பில் எந்தவித கருத்தினையும் கூற அவர் மறுத்துவிட்டார்.

"ஆணைக்குழுவின் உறுப்பினர் என்ற வகையில் அந்த அறிக்கை தொடர்பில் ஊடகங்களுக்கு எந்த கருத்தும் என்னால் கூற முடியாது. தற்போது குறித்த அறிக்கை பொது ஆவணமாக உள்ளமையினால் அதனை வாசித்து அறிந்துகொள்ளுங்கள்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

### அமைச்சர் சரத் வீரசேகர

இதேவேளை "தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் தொடர்பில் நாம் தனிப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டிருந்தோம். இதன் போது, குறித்த அமைப்புக்கள் நாட்டில் அடிப்படைவாதத்தினை பரப்பியதற்கான தெளிவான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதனையடுத்தே குறித்த அமைப்புக்களை தடை செய்தோம்" என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மாத்திரம் கருத்திற்கொண்டு குறித்த அமைப்புக்கள் தடை செய்யப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் தடை செய்யப்பட்ட அமைப்புக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தால், அவர்களின் தடை தொடர்பில் மீளாய்வு செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். இதனையடுத்து, மேற்படி பட்டியலில் உள்ள முதல் ஆறு அமைப்புக்களும் தங்களின் தடையினை மீளாய்வு செய்யுமாறு அமைச்சர் சரத் வீரசேகரவிற்கு எழுத்து மூலம் விசேட வேண்டுகோளொன்றினை முன்வைத்துள்ளன.

எனினும் நாட்டில் "அடிப்படைவாத்தினை பரப்பினார்கள்" என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டினை குறித்த ஐந்து தௌஹீத் அமைப்புக்களும் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கமும் தொடர்ச்சியாக நிராகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### பொதுபலசேனா

இதேவேளைஇ ""கலகொட அத்தே ஞானசார தேரர் பொதுச் செயலாளராக செயற்படும் பொதுபலசேனா அமைப்பின் நடவடிக்கைகள் சமய ஒற்றுமைக்கும்இ அமைதிக்கும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளன என்பது விசாரணை ஆணைக்குழுவின் அபிப்பிராயமாகும். இதனால் குறித்த அமைப்பு தடை செய்யப்பட வேண்டும்"" என ஜனாதிபதி ஆணைக்குழு சிபாரிசு செய்திருந்தது.

அது மாத்திரமல்லாமல் ""ஞானசார தேரரின் சில செயற்பாடுகள் மற்றும் அவர் உரையாற்றிய விதம் முஸ்லிம் இளைஞர்கள் தீவிரவாதிகளாக மாறுவதற்கு பங்களிப்பு செய்ததுடன் சஹ்ரானுடன் இணைவதற்கும் வழிகோலின"" என ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.சீ.சி.பீ.ஆர் சட்டத்தின் 56ஆம் பிரிவின் கீழ் மகரஹம (2013) மற்றும் அளுத்கம (2014) ஆகிய நகரங்களில் ஞானசார தேரர் ஆற்றிய உரைகள் தொடர்பில் குற்றவியல் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு விசாரணை ஆணைக்குழு சட்டமா அதிபருக்கு சிபாரிசு செய்தது.

### அரசாங்கம்

எவ்வாறாயினும், ஆணைக்குழுவின் இந்த சிபாரிசு தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் பொது பல சேனா அமைப்புக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளுக்கும் எடுக்காமல், முஸ்லிம் அமைப்புக்களை மாத்திரம் தடை செய்வதற்கு அனுமதி வழங்கியது.

இது தொடர்பில் அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கையினை ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் உறுப்பினருமான அமைச்சர் ரமேஷ் பத்திரனவிடம் வினவியதற்கு, "குறித்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையினை விரிவாக ஆராய்ந்த அமைச்சரவை உப குழுஇ பொதுபலசேனா அமைப்பினை தடை செய்யுமாறு எந்தவித சிபாரிசினையும் முன்மொழியவில்லை. குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் ஏனைய சட்ட அமுலாக்கல் துறையினர் ஆணைக்குழுவின் அறிக்கையினை புலனாய்வு செய்து வருகின்றனர். இது தொடர்பான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் இறுதி முடிவினை அமைச்சரவை உப குழு காத்துக்கொண்டிருக்கின்றது. இதன் அடிப்படையிலேயே பொதுபலசேனா அமைப்பினை தடை செய்வதா இல்லையா என்பது தொடர்பான இறுதி தீர்மானமொன்றை மேற்கொள்ளும்" என்றார்.

### மனித உரிமைசெயற்பட்டாளரின் கருத்து

இதேவேளை, நாட்டில் தடை செய்யப்பட்ட முஸ்லிம் அமைப்புக்களை பொறுத்தவரை தடை செய்யப்பட்டதற்கான காரணங்களை வெளிப்படையாக ஆதாரங்களுடன் தெரியப்படுத்தவில்லை என மனித உரிமை செயற்பாட்டாளர் அம்பிகா சற்குணநாதன் தெரிவித்தார்.

### அம்பிகா சற்குணநாதன்

"ஆகையால் இச்செயல் இந்நிறுவனங்களின் அங்கத்தவரின் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட உரிய செயல்முறை உரிமைகளை (Due Process Rights) மீறுகிறதா என்ற கேள்வி எழுகின்றது" எனவும் அவர் குறிப்பிட்டார்.

"ஒரு நிறுவனத்தை தடை செய்வதென்றால் அது சட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தெளிவான ஒரு வழிமுறையினாலேயே செய்யப்பட வேண்டும். மேலும்இ தடை செய்வதற்கான காரணங்கள் தெளிவாகவும் வெளிப்படையாகவும் தெரியப்படுத்தப்பட வேண்டும்" என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரான அம்பிகா தெரிவித்தார்.

இல்லாவிடில் அதிகாரத்தில் உள்ளவர்களின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கேற்ப நிறுவனங்களை தடை செய்யலாம். முக்கியமாக, தடை செய்யப்பட்ட நிறுவனத் திற்கு அத்தடையை மேல் முறையீடு செய்து சவாலுக்குட்படுத்த வழிமுறை இருக்க வேண்டும்"" என அவர் மேலும் கூறினார்

# விளையாட்டு செய்திகள்

## ஆசியக் கிண்ணம் – வெற்றி பெற்ற முதல் அணி...

ஆசியக் கிண்ண டி20 போட்டியில் பிரதான சுற்றில் விளையாட ஹாங்காங் அணி தகுதியடைந்துள்ளது.

ஆசிய கிரிக்கெட் கவுன்சில், ஆசியக் கிண்ண போட்டியை 1984 முதல் நடத்தி வருகிறது. 50 ஓவர், டி20 என இரு வகைகளிலும் இப்போட்டி நடைபெறும்.

இந்திய அணி ஆசியக் கிண்ணத்தை ஏழு முறை வென்றுள்ளது. 2022 ஆசியக் கிண்ண போட்டி இலங்கையில் நடைபெறுவதாக இருந்தது. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் மக்களின் தொடர் போராட்டங்கள் காரணமாக இலங்கைக்குப் பதிலாக ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆசிய கிண்ண டி20 போட்டி நடைபெறுகிறது.

ஆகஸ்ட் 27 முதல் செப்டம்பர் 11 வரை நடைபெறவுள்ள போட்டியில் ஆகஸ்ட் 28 அன்று இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இந்தியா, பாகிஸ்தான், தகுதிச்சுற்று அணி என மூன்று அணிகள் குரூப் ஏ பிரிவிலும் இலங்கை, ஆப்கானிஸ்தான், வங்கதேசம் ஆகிய அணிகள் குரூப் பி பிரிவிலும் இடம்பெற்றுள்ளன. இரு பிரிவுகளிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் சூப்பர் 4 சுற்றில் மோதவுள்ளன.

ஆசியக் கிண்ண டி20 கிண்ண தகுதிச்சுற்றுப் போட்டியில் ஐக்கிய அரபு அமீரகம், குவைத், சிங்கப்பூர், ஹாங்காங் ஆகிய நான்கு நாடுகள் விளையாடின. ஒவ்வொரு அணியும் தலா மூன்று ஆட்டங்களில் விளையாடியதில் ஹாங்காங் அணி முதலிடம் பெற்று இந்திய அணி உள்ள குரூப் ஏ பிரிவில் இடம்பெற்றுள்ளது.

அன்று நடைபெற்ற ஆட்டங்களில் குவைத் - சிங்கப்பூர், ஹாங்காங் - ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய அணிகள் மோதின. ஒரு இடத்துக்கு ஹாங்காங் - ஐக்கிய அரபு அமீரகம், குவைத் ஆகிய அணிகள் போட்டியிட்டன.

குவைத் அணி சிங்கப்பூரை 6 விக்கெட் வித்தியாசத்தில் வென்று 4 புள்ளிகளுடன் ஹாங்காங், ஐக்கிய அரபு அமீரக அணிகளுக்கு நெருக்கடி தந்தது. தகுதிச்சுற்றில் கடைசியாக நடைபெற்ற ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகத்தை ஹாங்காங் அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது. விளையாடிய மூன்று ஆட்டங்களிலும் வெற்றி பெற்ற ஹாங்காங் அணி, ஆசியக் கிண்ண போட்டியின் பிரதான சுற்றில் விளையாடும் தகுதியை அடைந்தது.

ஆகஸ்ட் 31 அன்று ஹாங்காங் அணி இந்தியாவுக்கு எதிராகவும் செப்டம்பர் 2 அன்று பாகிஸ்தானுக்கு எதிராகவும் விளையாடவுள்ளது.



## அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து நோவக் ஜோகோவிச் விலகல்!

ஆண்டின் இறுதி கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து, முன்னணி டென்னிஸ் வீரரான நோவக் ஜோகோவிச் விலகியுள்ளார்.

தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத காரணத்தால் அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் தன்னால் பங்கேற்க இயலாது என அவர் அறிவித்துள்ளார்.

மேலும், ஜோகோவிச் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், 'அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் விளையாட இந்த முறை என்னால் நியூயார்க்குக்கு பயணிக்க முடியாதது வருத்தம் அளிக்கிறது என தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா வரும் வெளிநாட்டவர்கள் கட்டாயம் கொரோனா தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ள போதும், தொடரில், பங்கேற்போருக்கு தடுப்பூசி கட்டாயம் இல்லை என அமெரிக்க டென்னிஸ் சங்கம் அறிவித்துள்ளது.

ஆனால், அமெரிக்காவில் நுழைவதற்காக வெளிநாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு தடுப்பூசி கட்டாயமாகிறது.

ஏற்கெனவே இதே கொரோனா தடுப்பூசி விவகாரத்தால், ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் தொடரான அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரில் ஜோகோவிச்சால் பங்கேற்க முடியாமல் போனது. பின்னர் பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடரில் களம் கண்ட அவர், அதில் காலிறுதியில் நடாலிடம் தோற்றார். பின்னர் விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டம் வென்றார்.

ஜோகோவிச் தற்போது 21 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களுடன், அதிக கிராண்ட்ஸ்லாம் வென்ற இரண்டாவது வீரராக உள்ளார். முதலிடத்தில், 22 பட்டங்களுடன் நடால் உள்ளார்.

இதேவேளை, டென்னிஸ் அரங்கில் பெண்கள் பிரிவில் அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற இரண்டாவது வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், இந்த தொடருடன் ஓய்வுப் பெறுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.




# ராகுல் டிராவிடுக்கு கொரோனா!

இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளரும் முன்னாள் வீரருமான ராகுல் டிராவிட் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளார். சிம்பாப்வே நாட்டில் நடைபெற்ற ஒருநாள் தொடரை இந்திய அணி 3 - 0 என முழுமையாக வென்றுள்ளது. இந்தத் தொடரில் இந்திய அணியின் பயிற்சியாளராக முன்னாள் வீரர் விவிஎஸ் லக்ஷ்மண் செயல்பட்டார். தலைமைப் பயிற்சியாளர் ராகுல் டிராவிடுக்கு ஓய்வு அளிக்கப்பட்டது.

இந்த வாரம் ஆசியக் கிண்ண டி20 போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய அணியினருடன் இணைந்து துபை செல்லவிருந்தார் டிராவிட். இந்நிலையில் கொரோனாவால் டிராவிட் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் ஆசியக் கிண்ண போட்டி நடைபெறும் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு டிராவிட் உடனடியாக செல்வது சந்தேகம் எனத் தெரிகிறது. இதையடுத்து ஆசியக் கிண்ண போட்டியிலும் விவிஎஸ் லக்ஷ்மணே இந்திய அணியின் பயிற்சியாளராகத் தொடர்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்த அதிகாரபூர்வ அறிவிப்பை பிசிசிஐ விரைவில் வெளியிடும் எனத் தெரிகிறது.

ஆசிய கிரிக்கெட் கவுன்சில், ஆசியக் கிண்ண போட்டியை 1984 முதல் நடத்தி வருகிறது. 50 ஓவர், டி20 என இரு வகைகளிலும் இப்போட்டி நடைபெறும். இந்திய அணி ஆசியக் கிண்ணத்தை ஏழு முறை வென்றுள்ளது. 2022 ஆசியக் கிண்ண போட்டி இலங்கையில் நடைபெறுவதாக இருந்தது. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் மக்களின் தொடர் போராட்டங்கள் காரணமாக இலங்கைக்குப் பதிலாக ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆசிய கிண்ண டி20 போட்டி நடைபெறுகிறது. ஆகஸ்ட் 27 முதல் செப்டம்பர் 11 வரை நடைபெறவுள்ள போட்டியில் ஆகஸ்ட் 28 அன்று இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.



# உலக பார்வை



## உலக சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை

உலக சந்தையில் டபிள்யூ.டி ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை தற்போது 93 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது. பிரன்ட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை இன்று 99.80 அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

## தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றிய பைடன்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போது மாணவர்களுக்கு அளித்த வாக்குறுதியின்படி, அவர்கள் வாங்கிய கல்விக் கடனில் 10,000 டொலர்களை தள்ளுபடி செய்வதற்கான அறிவிப்பை ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டுள்ளார். அமெரிக்காவில் படிக்கும் லட்சக்கணக்கான கல்லூரி மாணவர்கள் கல்விக் கடன் பெற்று திரும்ப செலுத்த முடியாமல் தவித்துவருகின்ற நிலையில், இந்த அறிவிப்பு அவர்களுக்கு பெரும் மகிழ்வை ஏற்படுத்தியுள்ளது.

எனினும், கல்விக் கடன் பெற்ற ஒவ்வொருவருக்கும் 50,000 அமெரிக்க டொலர்கள் அளவுக்கு தள்ளுபடி அளிக்க வேண்டும் என ஜனநாயக கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால், 10,000 டொலர்களை தள்ளுபடி செய்வதாக பைடன் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,



'கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட நடுத்தர மக்களுக்கு இந்த நடவடிக்கை பயனுள்ளதாக இருக்கும். அதிக வருவாய் உள்ள மக்களுக்கு இத்திட்டம் பயன் அளிக்காது.கடந்த ஆட்சியில், பணக்காரர்கள் பயன் பெறும் வகையில் 2 ட்ரில்லியன் மதிப்பிலான வரிச்சலுகைக் திட்டம் கொண்டுவரப்பட்டது. அதற்கு ஆதரவாக வாக்களித்தவர்களிடம், நடுத்தர மக்களுக்கு உதவியதற்காக நான் மன்னிப்பு கோர மாட்டேன்' என கூறினார்.

இந்த அறிவிப்பு, அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் நடைபெறும் நாடாளுமன்ற தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளர்களுக்கு சாதகமாக இருக்கும் என கூறப்படுகிறது. ஆனால், இது அமெரிக்காவின் பணவீக்கத்தை அதிகரிக்கும் எனவும் பொருளாதார நிபுணர்கள் சிலர் கூறியுள்ளனர். இதேவேளை, கல்விக் கடன் தள்ளுபடி வழங்க ஜனாதிபதிக்கு சட்டரீதியான அங்கீகாரம் இருக்கிறதா என எதிர்க்கட்சியான குடியரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர்.


## கோதுமை மாவு ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு!

உள்நாட்டில் விலையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கோதுமை மாவு ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு விதிப்பதற்கான மத்திய அரசின் முடிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

உலகின் மிகப்பெரும் கோதுமை உற்பத்தி நாடுகளான உக்ரைனுக்கும், ரஷியாவுக்கும் இடையே 6 மாதங்களுக்கு மேலாக மோதல் நீடித்து வருகிறது. அதனால், சா்வதேச அளவில் கோதுமைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக இந்திய கோதுமைக்கு சா்வதேச அளவில் தேவை அதிகமாகக் காணப்பட்டது ஏற்றுமதியும் அதிகரித்தது.

அதேவேளையில், கடந்த கோடைகாலத்தில் வீசிய வெப்ப அலை காரணமாக பஞ்சாப், ஹரியாணா உள்ளிட்ட வட மாநிலங்களில் கோதுமை உற்பத்தி சற்று பாதிக்கப்பட்டது. அதனால், உள்நாட்டிலேயே கோதுமைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு அதன் விலை அதிகரித்தது. அதையடுத்து, கோதுமை ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது.

இந்நிலையில், பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் கூட்டம் பிரதமா் நரேந்திர மோடி தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்றது. அதில், கோதுமை மாவு ஏற்றுமதிக்கும் கட்டுப்பாடு விதிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.



கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், 'கோதுமை மாவு ஏற்றுமதிக்குக் கட்டுப்பாடுகள் விதிக்க அமைச்சரவை அளித்துள்ள ஒப்புதல், உள்நாட்டில் அதன் விலை உயா்வைக் கட்டுப்படுத்த உதவும். நாட்டில் உள்ள விளிம்புநிலை மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் இந்த நடவடிக்கை உதவும்.

கோதுமை மாவு ஏற்றுமதிக்குக் கட்டுப்பாடு விதிப்பது தொடா்பான அதிகாரபூா்வ உத்தரவை வெளிநாட்டு வா்த்தக இயக்குநரகம் (டிஜிஎஃப்டி) பிறப்பிக்கும். கோதுமை ஏற்றுமதி தொடா்பாக ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட அமைச்சா்கள் குழு அளிக்கும் பரிந்துரையின் அடிப்படையில் கோதுமை மாவு ஏற்றுமதி தொடா்பாக முடிவெடுக்கப்படும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த 2021-22-ஆம் நிதியாண்டில் சுமாா் ரூ.1,850 கோடி மதிப்பிலான கோதுமை மாவை இந்தியா ஏற்றுமதி செய்திருந்தது. இது நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதலாவது காலாண்டில் சுமாா் ரூ.950 கோடியாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

## கால்சட்டைக்குள் 60 பாம்புகளை வைத்து கடத்திய நபர்!

750,000 அமெரிக்க டொலர் மதிப்புள்ள ஊர்வன கடத்தல் திட்டத்தின் ஒரு பகுதியாக, பாம்புகள் மற்றும் பல்லிகளை தனது கால்சட்டையில் மறைத்து வைத்து அமெரிக்காவிற்குள் கடத்த முயன்ற ஒரு நபர் 20 ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனையை எதிர்கொள்கிறார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெற்கு கலிபோர்னியாவில் வசிக்கும் ஜோஸ் மானுவல் பெரெஸ் (Jose Manuel Perez) என்ற நபர் இந்த ஆண்டு மார்ச் மாதம் மெக்சிகோவிலிருந்து அமெரிக்காவிற்கு வந்த ஒரு விமானத்தில், தனது கால்சட்டையில் பாம்புகள், பல்லிகள் என 60க்கும் மேற்பட்ட ஊர்வன விலங்குகளை மறைத்துவைத்து கடத்த முயன்றபோது அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். விசாரணையில், அவர் மெக்சிகோ மற்றும் ஹொங்ஹொங் வழியாக ஆறு வருடங்களுக்குள் 1,700 விலங்குகளை அமெரிக்காவிற்குள் சட்டவிரோதமாக கடத்தும் மிகப்பெரிய சதித்திட்டத்தின் மாஸ்டர்மைண்ட் என்பது தெரியவந்தது.

அவர் அளித்த வாக்குமூலத்தில், சில சமயங்களில் அவரே விலங்குகளை பல வழிகளில் கடத்தியுள்ளதாகவும், மற்ற நேரங்களில் சிலரிடம் பணம் கொடுத்து அவர்களுக்கே தெரியாமல் விலங்குகளை மறைத்து வைத்து பெட்டிகள் அல்லது லக்கேஜ்கள் மூலம் கடத்தியுள்ளதாகவும் ஒப்புக்கொண்டார்.

அவர், இதுவரை யுகடன் பாஸ் ஆமைகள், மெக்ஸிகன் பாஸ் ஆமைகள், இளம் முதலைகள் மற்றும் மெக்ஸிகன் பிரடெட் பல்லிகள் உட்பட அமெரிக்க முழுவதும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு 739,000 டொலர்களுக்கும் அதிகமாக விற்றுள்ளதாக கூறினார்.





## ஆப்கானிஸ்தானில் வெள்ளப்பெருக்கில் 182பேர் உயிரிழப்பு!

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஆளும் தலிபான்களின் கூற்றுப்படி, ஆப்கானிஸ்தானில் பருவகால மழையினால் ஏற்பட்ட கடும் வெள்ளப்பெருக்கில், ஒரு மாதத்தில் குறைந்தது 182பேர் உயிரிழந்துள்ளனர் மற்றும் திடீர் வெள்ளத்தின் விளைவாக 250க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அதே நேரத்தில் 3,000க்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டன அல்லது சேதமடைந்துள்ளதாக, தலிபானின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் 16 முதல் 21ஆம் திகதி வரையிலான காலக்கட்டத்தில், 63பேர் திடீர் வெள்ளத்தில் உயிரிழந்தனர். மேலும் 30 பேர் காணாமல் போயுள்ளதாகவும், 13 மாகாணங்களில் 8,200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்புக்கான ஐ.நா அலுவலகம் தெரிவித்துள்ளது. சமீபத்தில் கிழக்கு லோகார் மாகாணத்தில், குஷி மாவட்டத்தில் உள்ள கிராம மக்கள், அப்பகுதியின் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வெள்ளத்தில் பாதிக்கப்பட்டனர்.

இந்த வெள்ளத்தால், விலங்குகள், வீடுகள் மற்றும் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து அங்கிருந்த மக்கள் மலைகளில் தஞ்சம் அடைய மக்கள் வீடுகளை விட்டு வெளியேறினர். ஆப்கானிஸ்தானின் 34 மாகாணங்களில் எதிர்வரும் நாட்களில் அதிக மழை பெய்யும் என்று உள்ளூர் வானிலை துறை எச்சரித்துள்ளது. நாடு முழுவதும் பெய்த கனமழை மற்றும் திடீர் வெள்ளத்தில் ஜூலை மாதத்தில் 40 பேரும் அதற்கு முந்தைய மாதத்தில் 19 பேரும் உயிரிழந்தனர்.



# சில்மியூர் முனீரா வாஹித் எழுதிய "கரையோர வேர்கள்" நூல் வெளியீட்டு நிகழ்வு!







ஸ்கை தமிழ் வலையமைப்பின் வெளியீட்டில் சில்மியாபுரா நலன்புரிச் சங்கம் அனுசரணையில் சில்மியூர் முனீரா வாஹித் எழுதிய "கரையோர வேர்கள்" நூல் வெளியீட்டு நிகழ்வு பதுளை மாவட்ட சில்மியாபுர அல்- முர்ஷித் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் பாடசாலை அதிபர் எம். செய்யத் முஹம்மத் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வெலிமடை வலயக்கல்வி பணிமனையின் பிரதிக் கல்வி பணிப்பாளர்களான ஆர். எம் நவாஸ், ஜே. டி. எம் முர்ஷித் ஆகியோர் விசேட அதிதியாகவும் சிறப்பு அதிதிகளாக அதிபர்களான ஏ. எஸ் ரஹ்மத்துல்லாஹ், எச்.எம் பத/ஹல்லாஹ், கே. வேலாயுதம் மற்றும் அரசியல் பிரமுகரான ஏ.எம் இல்லியாஸ், உலமாக்கள், ஊர் பிரமுகர்கள் புத்திஜீவிகள், கல்விமான்கள் மற்றும் மாணவர்கள் பலர் பங்கேற்றனர்.

## நீலத்திமிங்கலம்

நீலத் திமிங்கலம் தான் உலகிலேயே மிகப் பெரிய விலங்கு. டைனோசர்களை விடப் பெரியவை இந்த திமிங்கலங்கள்.

நீலத் திமிங்கலம் கடலில் வாழும் பாலூட்டி வகையைச் சார்ந்தது.

இது 80 முதல் 100அடி நீளம் வரை இருக்கும்.

இதன் எடை 150டன்கள்(1,50,000கிலோ கிராம்) வரை இருக்குமாம்!

இது 80முதல் 90ஆண்டுகள் வரை வாழும். இதுவரை கண்டறியப்பட்ட நீலத் திமிங்கலத்தின் அதிகபட்ச வயது 110ஆண்டுகள்.

இது எழுப்பும் ஒலி ஜெட் விமானத்தின் எந்திரத்தின் ஒலியை விட அதிகமாக இருக்கும். அதாவது ஏறத்தாள 188டெசிபிள்கள்.



## சன் டூங் குகை

சன் டூங் குகை, (Son Doong Cave) (வியட்நாமியம்: Hang Sơn Đoòng) வியட்நாம் நாட்டின் மலைத்தொடர்களில் இயற்கையாகவே அமைந்த உலகின் மிகப் பெரிய சுண்ணாம்புக்கல் புற்றுப்பாறை குகையாகும்.

இது 5 கிலோ மீட்டர் நீளமும், 200 மீட்டர் உயரமும், 150 மீட்டர் அகலமும் கொண்ட 150 தனித்தனி குகைகளின் தொடராகும்.





இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 28.08.2022 அன்று வெளியிடப்பட்டது.